# செந்தமிழ் வாசகம்

143
1-49

## மூன்றாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

ஆசிரியர்:

வி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

ஸ்ரீநிவாஸ் அண்டு கோ

புதுக்கோட்டை

1949 [விலை அணு 0-6-6

TB
031(8)
N49
146842

# செந்தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

ஆசிரியர் :
வி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

ஸ்ரீநிவாஸ் அண்டு கோ
புதுக்கோட்டை

பதிப்புரிமை]. 1949 [விலை அணா 0-6-6

பத்தாம் பதிப்பு : 1949

TB
031(8)
N49

சென்னை-600 008.
146842

PINTRD AT THEP RAJAN ELECTRIC PRESS, MADRAS—1.

# பொருளடக்கம்


| எண். | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | நம் நாடு | .... | 1 |
| 2. | நமது கொடி | .... | 5 |
| 3. | கொடிப்பாட்டு | .... | 9 |
| 4. | கலைமகள் | .... | 10 |
| 5. | திருமூலர் | .... | 15 |
| 6. | நீர் நிலைகள் | ... | 21 |
| 7. | நல்ல மழை | .... | 25 |
| 8. | வீரமும் அறிவும் | ... | 26 |
| 9. | மிருகங்கள் | .... | 31 |
| 10. | தேசமும் உடையும் | .... | 35 |
| 11. | அரசு துறந்த பெரியோன் | .... | 39 |
| 12. | அன்பு வழி | .... | 43 |
| 13. | உழவின் உயர்வு | ... | 46 |
| 14. | மலர்கள் | .... | 50 |
| 15. | மலர் கொய்தல் | .... | 55 |
| 16. | உலோகங்கள் | .... | 56 |
| 17. | கம்பரும் அரசரும் | .... | 60 |
| 18. | கிராம சுகாதாரம் | .... | 64 |
| 19. | நான் கிராமவாசி | .... | 69 |
| 20. | காரைக்கால் அம்மையார் | .... | 73 |
| 21. | ஒற்றுமை | .... | 77 |
| 22. | ஒற்றுமை (பாட்டு) | .... | 80 |
| 23. | அண்ணனும் தம்பியும் | .... | 81 |
| 24. | உழைப்பும் சோம்பலும் | .... | 86 |
| 25. | நான் தேசபக்தன் | .... | 87 |

# செந்தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்

### 1. நம் நாடு

இந்தியா என்பது நம் நாடு. நாம் இதைப் பாரத தேசம் என்றும் சொல்வது உண்டு. நம் நாட்டின் வடக்கே இமயமலை இருக்கிறது. தெற்கே தென் கடல் இருக்கிறது. கிழக்கிலும் மேற்கிலும் கடல் உண்டு. மலையும் கடலும் சூழ்ந்த நம் நாட்டில் முன்னாளில் அயலார் எளிதில் நுழைய முடியாது. இன்று நாம் சுதந்திரம் அடைந்திருக்கிறோம்.

நம் நாடு பழமை சிறந்தது; பெருமை மிகுந்தது. வலிமை வளர்ந்தது; கல்வி தழைத்தது. செல்வம் செழித்தது; கலை கொழித்தது; எவ்வகையாலும் குறைவில்லாமல் இருந்தது. ஒற்றுமை இல்லாதிருந்ததால் பிறர் வந்து அடக்கி ஆண்ட நிலையில் இருந்தது. இனி நம் நாடு ஒற்றுமையால் வெற்றி பெறும்; உலகத்திற்கே சிறந்த வழி காட்டி ஆகும்.

நம் நாட்டிலே பல ஆறுகள் ஓடுகின்றன. அவைகள் பயிர் வளர்த்து நன்மை செய்கின்றன. கங்கை யமுனை நருமதை என்ற ஆறுகள் வடநாட்டில் ஓடுகின்றன. காவேரி கோதாவரி தாமிரவருணி முதலியன தென்னாட்டில் ஓடுகின்றன. இந்த ஆறுகள் நாட்டுக்கு வளம் தருவதோடு வியா



பார வழியாகவும் உதவுகின்றன. கங்கை காவேரி முதலியவை புண்ணிய நதிகளாம். அவைகளில் முழுகுவதால் புண்ணியம் வரும் என்ற நம்பிக்கை நம் நாட்டில் உண்டு.

இராமனும் கண்ணனும் நம் நாட்டிலே பிறந்தவர்கள். இந்துக்கள் இவர்களைக் கட

வுளின் அவதாரம் என்று நினைக்கிறார்கள். இவர்கள் உலகத்தில் இருந்த தீமைகளை ஒழித்து நன்மைகளை வளர்த்தார்கள். இவர்கள் வாழ்வின் வரலாறு பல நீதிகளை விளக்குவதாம். இராமகதையை இராமாயணத்திலே படிக்கிறோம். கண்ணன் கதை பாரதத்திலும் பாகவதத்திலும் வருகிறது. இவைகள் நாம் கற்று நலம் பெறத்தக்க சிறந்த கதைகளாம்.

நம் நாட்டில் முனிவர் பலர் வாழ்ந்தனர். நாயன்மார் பலர் பிறந்து வாழ்ந்தனர். ஆழ்வார்கள் பலர் பிறந்து வாழ்ந்தனர். இவர் எல்லாரும் தெய்வ பக்தி மிக்கவர். கடவுள் ஒருவர் உண்டு என்ற உண்மை விளங்கவே வாழ்ந்தவர். இப்பெரியோர் வரலாறுகளை நாம் படித்து நன்மை பெறலாம். வீரர் பலர் முன்னாளில் இருந்தனர். புலவர் பலர் பிறந்து சிறப்பு அடைந்தார்கள். இவர்களையும் நாம் மறவாமல் நினைக்க வேண்டும்.

வர்த்தமான மகாவீரர் நம் நாட்டிலே பிறந்தவர். இவர் சமணமதத்தை நமக்கு உதவினார். கௌதம புத்தர் நம் நாட்டில் பிறந்து வாழ்ந்தார். புத்தமதத்தை இவர் உலகிற்கு உதவினார். குரு நானக் என்ற மகான் சீக்கிய மதத்தை உதவினார். ராஜா ராம் மோகன்ராய் என்ற பெரியவர் பிரமசமாஜம் என்ற புதிய கொள்கையை விளக்கினார். தயானந்தசரஸ்வதி என்ற பெரியோர் ஆரிய

சமாஜம் என்ற புதுவழியை விளக்கினர். இராம கிருஷ்ண பரம ஹம்ஸரும் இராம லிங்க சுவாமிகளும் எல்லா மதமும் ஒன்றே என்ற உண்மையை விளக்கினர்கள்.

இப்பொழுது நாம் சுதந்திர இந்தியா வில் வாழ்கிறோம். இந்த வாழ்வு நமக்கு எப் படிக் கிடைத்தது? வலிமை மிக்க ஆங்கில அரசு நம்மை ஆண்டு வந்தது. நாம் மகாத்மா காந்தியடிகள் வழியில் நின்று அமைதி யோடு எதிர்த்து வென்றோம். நாம் சுதந் திரம் பெற உதவிய பெரியோர்களை மறக்க லாமா? காந்தி, நேரு, முதலிய புண்ணிய வான்கள் பெயர்களை நாம் எப்பொழுதும் நினைக்க வேண்டும்.

நாம் நம் நாட்டிற்காக என்ன செய்ய லாம்! தேச பக்தர் சொல்லிய வழியில் நின்று ஒற்றுமையும் அன்பும் அமைதியும் நாட்டில் நிலை பெறச் செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| நாடு | ஒற்றுமை | பாரதம் | பாரத தேசம் |
| தேசம் | நம்பிக்கை | பாகவதம் | முன்னாள் |
| அயலார் | முழுகுவது | முனிவர் | வழிகாட்டி |
| எளிதில் | புண்ணியம் | நாயன்மார் | வடநாடு |
| அரசு | அவதாரம் | ஆழ்வார் | தென்னாடு |
| மகான் | சுதந்திரம் | மகாத்மா | புத்தமதம் |
| பக்தி | அமைதி | சமணமதம் | சீக்கியமதம் |

கேள்விகள்

1. அயலார் இந்தியாவில் நுழைய முடியாமை ஏன்?
2. முன்னாளில் நம் நாடு எப்படி இருந்தது?

3. நம் நாடு இனி எப்படி இருக்க வேண்டும்.?
4. ஆறுகள் நமக்கு எப்படி உதவும்?
5. மதம் உதவிய நால்வர் பெயர் கூறுக.
6. சுதந்திரத்துக்காக உழைத்த பெரியோர் சிலர் பெயர் கூறு-

பயிற்சி

I. கீழே கண்ட வாக்கியங்களின் கடைசியில் முற்றுப் புள்ளி வர வேண்டுமா? கேள்விக் குறி வர வேண்டுமா? வைத்து எழுது.

1. தம்பி, பாடம் படித்தாயா
2. அண்ணு, நான் தூங்கி விட்டேன்
3. இமயமலே வடக்கே இருக்கிறது
4. காவேரி மேற்கே ஓடுகிறதா
5. கடல் நீர் இனிக்குமா
6. உணவு இல்லே என்ருல் பசிக்கும்

II. கோடிட்ட இடத்தில் ஒரு சொல் எழுது.

1. ஆறுகள்——விழுகின்றன.
2. பாரதத்தில்——கதை வரும்.
3. இராம கதை——உண்டு.
4. நாயனர்——வணங்கினர்.
5. புத்தர்——அருளினர்.
6. நானக்——உதவினர்.

## 2. நமது கொடி

இது நமது கொடி. நம் நாட்டின்கொடி இதுவே. இக் கொடி நம் சுதந்திர இந்தியாவின் அடையாளம் ஆகும். இக் கொடியில் மூன்று நிறம் உண்டு. சிவப்பு நிறம், பச்சை நிறம், வெண்மை நிறம் என்ற மூன்றையும் காண்கிருேம். பச்சைக்கும் சிவப்புக்கும் நடுவில் வெண்மை இருக்கிறது. வெள்ளேப் பகுதியில் ஒரு சக்கரம் உண்டு இந்தச் சக்கரம் தரும சக்கரம் ஆகும். அசோக சக்கரம் என்றும் சொல்லபபடும்.

இக் கொடி இன்று நம் நாட்டின்கொடியாக எங்கும் உயர்ந்து பறக்கிறது. இக் கொடியின் கருத்து என்ன என்று பார்ப்போம். பச்சை, பசுமை செழிப்பு வளர்ச்சி நன்மை முதலியவைகளைக் குறிக்கிறது. சிவப்பு, செம்மை நேர்மை நெறி உயர்வு பெருமை முதலியவைகளைக் குறிக்கிறது. வெளுப்பு அழுக்கு இல்லாத தன்மை, வஞ்சகம் இல்லாத குணம், குழந்தை மனம் முதலியவைகளைக் குறிக்கிறது.

நாம் வணங்கும் கடவுளை மூன்று வகையாகப் பார்க்கலாம். கடவுள் படைப்பதும் காப்பதும் அழிப்பதும் உண்டு. படைக்கும் போது கடவுளை வெளுப்பாகப் பார்ப்போம். காக்கும்போது பச்சையாகப் பார்ப்போம். அழிக்கும்போது சிவப்பாகப் பார்ப்போம். இந்த மூன்று நிறங்களும் நம் கொடியில் இருப்பதை அறிகிறோம்.

கலைமகள் திருமகள் செயமகள் என்று மூன்று உருவம் உண்டு என்று கூறுகிறோம். கலைமகள் கல்விக்குத் தெய்வமாம். திருமகள் செல்வத்துக்கு உரிய தெய்வமாம். செயமகள் போரில் வெற்றி தரும் தெய்வமாம். கலைமகள் நிறம் வெண்மையாம். திருமகள் நிறம் சிவப்பாம், செயமகள் நிறம் பச்சையாம். இந்த மூன்று நிறங்களும் நம் கொடியில் இருப்பதைக் காண்கிறோம்.

சூரியன் சிவப்பு நிறம் உள்ளவன். சந்திரன் வெண்மை நிறம் உள்ளவன். இந்த இருவரும் தரும் மழையால் வரும் பயிர் பச்சை நிறம் உள்ளது. உலகம் சிவப்பு வெண்மை பச்சை என்ற மூன்று கலந்தே வாழ வேண்டும். உலக வாழ்வு சூரியன் கதிரால் நடக்கிறது. சந்திரன் நிலவால் வளர்கிறது. பசும் பயிர் வளர்வதால் ஓங்குகிறது.

நம் கொடிக்குள் இருக்கும் சக்கரம் உலகம் முழுதும் சுற்றி வரும் தருமத்தையே குறிப்பது ஆகும். தருமம் எங்கும் போக வேண்டும். எங்கும் திரிய வேண்டும். அதற்காகவே அது சக்கரமாக உள்ளது. அச்சக்காத்தில் உள்ள ஆரம் எல்லாம் தருமத்தின் உருவமே.

நமது கொடி நம்நாட்டில் உள்ள எல்லா இனத்தாருக்கும் பொதுவானது. இந்துக்கள் முகமதியர் கிரிஸ்தவர் என்ற மூன்று வகையாரும் இக் கொடியின் கீழ் வாழ்பவரே. இந்த வகுப்புள் அடங்காத இனத்தாரும் இக்கொடிக்கு உரியவரே. ஏழைகளுக்கு உரிமை தரும் கொடி இதுவே. செல்வர்க்கு பெருமை தரும் கொடியும் இதுவே. தொழிலாளிகள் தலை தூக்கும் கொடியும் இதுவே. முதலாளிகள் தலை வணங்கும் கொடியும் இதுவே.

அஹிம்சை சத்தியம் தருமம் என்ற மூன்றும் உருவாகிய நம் நாட்டுக் கொடியை

எப்பொழுதும் நமது மானத்தின் குறியாக நாம் போற்றுவோமாக. நமது சுதந்திர கொடியை நாம் வணங்குவோம். வானம் அளாவிய கொடிக் கம்பத்தில் நாட்டிப் பறக்க விடுவோம். அக் கொடியின் உயர்வு நம் கையில் இருக்கிறது. ஆகவே நாம் எல்லோரும் ஒரு கொடியின் கீழ் ஒற்றுமையாய் வாழ்வோமாக.

| | | |
|---|---|---|
| கொடி | படைப்பது | இந்துக்கள் |
| சூரியன் | கிரிஸ்தவர் | சுதந்திர இந்தியா |
| சந்திரன் | முகமதியர் | தொழிலாளி |
| அழிப்பது | செழிப்பு | தரும சக்கரம் |
| காப்பது | கலைமகள் | உலக வாழ்வு |
| தருமம் | திருமகள் | அடையாளம் |
| செல்வர் | செயமகள் | நாட்டுக் கொடி |
| நேர்மை | முதலாளி | அசோகசக்கரம் |
| | சத்தியம் | அஹிம்சை |

### கேள்விகள்

1. நமது கொடி எப்படி அமைந்திருக்கிறது?
2, கொடியின் கருத்து என்ன?
3. கடவுள் மூன்று வகையாவது எப்படி?
4. மூன்று பெண் தெய்வங்கள் எப்படி இருக்கும்?
5. தரும சக்கரம் என்ன சொல்கிறது?
6. எல்லோருக்கும் பொதுவான கொடி என்பது எதனால்?

### பயிற்சி

I. கீழ்கண்ட சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.

அஹிம்சை, சத்தியம், தருமம், வானம், தருமசக்கரம் தொழிலாளி, முதலாளி, செல்வர், ஏழைகள், இந்துக்கள், முகமதியர், கிரிஸ்தவர், நம் கொடி.

II. வாக்கியத்தை முடித்துக் காட்டுக.

1. நாம் விளையாட ஆற்றுக்குப்————
2. ஆற்றில் தண்ணீர்————
3. நமது கொடி டில்லியில்————
9. கொடியில் மூன்று நிறம்————
5. நாம் கொடியின் கீழ்————
6. ஒற்றுமையால் வெற்றி————

## 3, கொடிப்பாட்டு

1. நமது கொடியிது பாராய்—நமது
நாட்டுக் கொடியிது நாட்டுவம் நேராய்
இமய முடிமிசை யேற்றிக் குமரி
எல்லையளவும் இசைவுறப் போற்றி—நமது

பச்சை சிவப்பிடை வெண்மை—கொண்டு
பழமைய சக்கரம் தழுவுறக் கண்டு
கச்சை வரிந்தனர் வீரர்—கொடி
காப்பது கடமையாக் கருதிய தீரர் 2

குடிகள் பலபல வேனும்—இன்றும்
குலங்கள் இனங்களோர் கோடியா மேனும்
கொடியி னடியிலே நின்றே—அதன்
கொள்கையைப் போற்று தல்கூடுதல் நன்றே

உழவருக் குரியதக் கொடியே—உயர்வு
ஓங்கிய வணிகருக் குரியதக் கொடியே
கிழவருக் குரியதக் கொடியே—நிலக்
கிழமை யில்லாதவர்க் குரியதக் கொடியே 4

கலைஞர் நினைப்பதக் கொடியே—கலை
கண்ட நலமெலாம் கொண்டதக் கொடியே
நிலைமை சிறப்பதக் கொடியே—என்றும்
நிரம்பு நலங்களை நிறைப்பதக் கொடியே 5

உண்மை யுறுதி விளங்கும்—கொடி
உத்தமர் காந்தி யுழைப்பின் பயனும்
வண்மை விளங்க வழங்கும்—கொடி
மாபெரும் பாரத நாட்டின் கொடியாம் 6

சத்தியம் சாந்தம் அஹிம்சை—என்னும்
தத்துவம் காட்டும் தனிப்பெருங் கொடிதான்
சத்தியம் தருமமே தழைக்க—உலகில்
தன்பெரு நன்மை தழைக்க நிமிரும் 7

இந்திய நாட்டின் கொடியே—நமது
ஏற்றம் விளங்க இயற்றிய கொடியே
இந்திய சுதந்திரக் கொடியே—இதை
என்றும் வணங்குவம் வாழ்த்துவோம்
இனிதே 8

பயிற்சி

I. நம்கொடி, இந்தியக் கொடி, சுதந்திரக்கொடி, நாட்டின் கொடி என்ற சொற்களை வைத்து வாக்கியம் எழுது.

II. கொடியைப்பற்றி மூன்று வாக்கியம் எழுதுக.

## 4. கலைமகள்

படத்தில் இருப்பவள் யார்? இவள் கலைமகள். இவளுக்கு நாமகள் என்ற பெயரும் உண்டு சரசுவதி என்றும் சொல்வோம். கல்விக்கு உரிய தெய்வம் இவளே. இவள் நம் நாவில் இருக்கிறாள். நாவில் இருப்பதால் நாமகள் என்ற பெயர் வந்தது. வெண்மை நிறம் உள்ள தாமரைப் பூவில் இவள் இருக்கிறாள். தாமரை தண்ணீரில் மலரும்.

கலைமகளுக்கு நான்கு கைகள் உண்டு. இரண்டு கைகளால் வீணையை மீட்டுகிறாள். ஒரு கையிலே புத்தகம் வைத்திருக்கிறாள். மற்றொரு கையில் படிக மாலை இருக்கிறது. இவள் எப்பொழுது படிக்கிறாள்; பாடுகிறாள்; வீணை வாசிக்கிறாள். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் கலைமகள் போல எப்பொழுதும் கற்க வேண்டும்.



கலைமகள் கோயில் வெண்மையான தாமரைப்பூ. அவள் வெண்மையான ஆடை அணிகிறாள். முத்து, படிகம், வயிரம் போன்ற வெண்மையான மணிகளையே பூணுகிறாள். வெண்மை நிறம் தூய்மை உள்ளது. கலையும் கல்வியும் தூய்மையும் சேர்ந்த உருவம் கலைமகளாம்.

கலைமகளை வணங்குவோம்; வாழ்த்துவோம்; போற்றுவோம்; மனத்தால் நினைத்து வேண்டுவோம். கலைமகளை வேண்டினால், நல்ல மனம்வரும்; நல்ல வாக்கு உண்டாகும்; நல்ல கல்வி வரும். ஆதலால் நாள் தோறும் நாம் கலைமகளை வணங்குவோம்.

தமிழ் மாதங்கள் பன்னிரண்டு. அவற்றுள் புரட்டாசி என்பது ஒன்று. புரட்டாசி மாதம் நவராத்திரி பண்டிகை வரும். ஒன்பது இரவு கொண்டாடும் பண்டிகை அதுவாம். மூன்று மூன்று நாளாக மூன்று தெய்வங்களை வணங்குகிறோம். கடைசி மூன்று நாள் கலைமகளுக்கு உரியதாகும். கலைமகளை நாம் ஒன்பதாம் நாளில் வணங்குகிறோம். அடுத்த நாள் புத்தகங்களை எடுத்துப் படிக்கிறோம்.

ஏடுகள், புத்தகங்கள், வீணை, குழல் முதலிய வாத்தியங்கள், மத்தளம், மிருதங்கம் போன்ற கருவிகள் இவைகளையெல்லாம் வைத்து வணங்குகிறோம். கலைமகள் இவைகளில் இருக்கிறாள் என்று நம்புகிறோம். வாள், வேல் முதலிய கருவிகளையும் வைப்பது உண்டு. இவைகளை அடுக்கி வைத்து மலர் தூவுகிறோம். சந்தனம் குங்குமம் சாத்துகிறோம். தேங்காய் பழம் படைக்கிறோம். வாயாரப் பாடி வணங்குகிறோம். கலைமகளை வணங்கும் வழிகளில் இது ஒன்று.

ஒரு பொழுதும் வீணுகாமல் எழுதுவது படிப்பது, பாடுவது, கணக்குப் போடுவது முதலியவைகளைச் செய்வதும் கலைமகள் பூசையே ஆகும். புத்தகத்தை அடுக்கி மலர் தூவுவதை விட அவைகளைப் படித்து அறிந்து பயன் பெறுவது சிறந்த பூசை யாம். வீணையைப் பார்த்துக் கை குவிப்பதை விட அதை எடுத்து மீட்டிப் பாடப் பழகு வது சிறந்த பூசையாம்.

ஆயிரம் பூக்களை எடுத்து மாலை கட்டிப் புத்தகத்தின் மேல் சாத்துகிறோம். படிப் பதற்கு வழி இல்லாத ஏழைகள் பலர் உண்டு. புத்தகத்தையே படித்துப் பாராத பலர் நம் நாட்டில் உண்டு. எழுத்தின் மணம் தெரியாத குழந்தைகள் சுதந்திர இந்தியாவில் இருக்கலாமா? எந்த ஊரில் கல்வி இல்லையோ, எந்த வீட்டில் புத்தகம் இல்லையோ, அங்கே கலைமகள் நுழைய வேண்டும். அதுவே கலைமகளுக்கு மிகவும் சிறந்த பூசையாம். படிப்பு உள்ளவர் படிப்பு இல்லாதவருக்கு அதைக் கொடுக்க வேண்டும். ஏழைகளுக்குப் பணம் உதவும் புண்ணியத்தை விட இதுவே சிறந்ததாம்.

வெண்தாமரையாள், கலைவாணி, நாமகள் இசை மகள், சரசுவதி சகல கலா வல்லி முதலிய பெயர்கள் கலைமகளுக்கு உண்டு. எந்தப் பெயரால் அழைத்தால் என்ன? எப் பொழுது வணங்கினல் என்ன? எங்கே

இருந்து பூசை செய்தால் என்ன? யார் வேண்டினால் என்ன? கலைமகள் அருள் உண்டு.

| | | |
|---|---|---|
| கலைமகள் | பண்டிகை | படிகமாலை |
| வீணைகாமல் | கலைவாணி | நாமகள் |
| வாத்தியம் | தூவுவது | மத்தளம் |
| தூய்மை | உருவம் | மிருதங்கம் |
| இசை மகள் | சரசுவதி | வாழ்த்து |
| குவிப்பது | மீட்டுவது | போற்று |
| நவராத்திரி | குங்குமம் | வாயார |
| சகலகலாவல்லி | வெண்தாமரையாள் | சாத்துகிறோம் |

## கேள்விகள்

1. கலைமகள் உருவம் எப்படி இருக்கும்?
2. தூய்மையே கலைமகள் என்பது எப்படி?
3; கலைமகளை வணங்கினால் என்ன நன்மை வரும்?
4. சரசுவதி பூசை எப்படி நடக்கிறது?
5· சிறந்த பூசை என்று எதைச் சொல்லலாம்?
6. கலைமகள் பெயர்கள் சில சொல்லுக'

## பயிற்சி

தலையால் வணங்குகிறோம். நாவால் பாடுகிறோம். மனத்தால் நினைக்கிறோம். இவை போலவே கீழ்க்கண்ட சொற்களை வைத்து வாக்கியம் முடித்து எழுதுக.

தலையால் வணங்குகிறோம்.

1. கலப்பையால்————
2. வாளால்————
3. எழுதுகோலால்————
4. கையால்————
5. கண்ணால்————
6. காதால்————
7. வாயால்————
8. காலால்————

புத்தகத்தைப் படிக்கிறோம்,

1. உணவை————
2. தண்ணீரை————
3. பாட்டைப்————
4. வீணையை————
5. நிலத்தை————
6. குழந்தையைக்————
7. வானத்தைப்————
8. ஊரை————

# 5. திருமூலர்

திருவாவடுதுறை என்ற ஊர் சோழ நாட்டில் இருக்கிறது. கும்பகோணத்துக்கு அருகிலே பல சிவதலங்கள் உண்டு. அவைகளில் திருவாவடுதுறை ஒன்ருகும். இவ்வூரில் ஒரு பழமையான சிவாலயம் இருக்கிறது. அக்கோவிலில் உள்ள கடவுளை வணங்கி நன்மை பெற்றவர் பலர். சம்பந்தர், அப்பர் முதலிய பெரியோர் இங்கு வந்து பாடியது உண்டு. திருவாவடுதுறையும் திருவிடை மருதூரும் மிகவும் புகழ் பெற்ற சிவதலங்களாம். இவை ஒன்றுக்கொன்று பக்கத்தில் உள்ளவை.

முன் காலத்திலே திருவாவடுதுறையில் ஒரு இடையன் வாழ்ந்து வந்தான். அவன் அவ்வூர் மாடு கன்றுகளை மேய்ப்பது வழக்கம். காவேரி ஆற்றில் கரையோரமாக உள்ள புல்வெளிகளில் மாடுகளை மேய்ப்பான். ஆற்று நீரை வெயில் வேளையில் அந்த மாடுகள் குடிக்கும் காலையிலே ஓட்டிப்போய் மாலையில் அவைகளை ஊருக்கு அழைத்து வருவான். அவன் எழுத்து மணம் அறியாத ஏழையாய் இருந்தான். மாடுகளை அவன் அன்பாகப் பேணியதால் அவை அவனிடம் அன்பாய் இருந்தன. அவ்வூரார் அவனை மூலன் என்று அழைப்பது உண்டு.

மூலனுக்கு உலக அறிவு இல்லை. கல்வி கேள்வியும் இல்லை. பெரியோர் பழக்கமும் ஏற்படவில்லை. கடவுளை நினைப்பது எப்படி, வணங்குவது எப்படி என்ற உண்மையும் அவனுக்குத் தெரியாது. ஆயினும் மாடு மேய்க்கும் தொழிலை அவன் மிகவும் ஒழுங்காக நடத்தி வந்தான். அவன் குரல்



கேட்டதும் மாடுகள் ஓடி வரும். அவன் கையில் இருந்த தடி ஒரு நாளும் மாடுகளை அடிக்க உதவியது இல்லை. கன்றுகள் வழி தவறிவிடமால் அவன் இங்கும் அங்கும் நடந்து பார்த்து மெல்ல அழைத்து வருவான். மாடுகள் எப்பொழுதாவது முட்டி மோதுவது உண்டு. அவை மூலனைக் கண்டதும் அடங்கி விடும்.

ஒரு நாள் மூலன் ஆற்றங் கரையிலே மாடுகளை மேயவிட்டு ஒரு மர நிழலிலே படுத்திருந்தான். பகல் வேளையில் வெயில் பொறுக்காமல் நிழலிலே அவன் படுப்பது உண்டு. மாலையில் எழுந்து மாடுகளின் பக்கம் வருவான். இந்த வழக்கம் போல் அன்று அவன் எழுந்திருக்க வில்லை. அவன் வாழ் நாள் முடிந்து விட்டது. மாடுகள் மூலனைத் தேடி வந்தன. அவனைச் சுற்றி வட்டம் இட்டன. அவன் உடம்பில் உயிர் இல்லை என்பதை எப்படியோ அறிந்து கொண்டன. உயிர் இல்லாத உடம்பை முகர்ந்து பார்த்துக் கதறின. அன்பால் தம்மைப் பேணிய மூலனை அவை பிரிய மனம் கொள்ளாமல் மயங்கி நின்றன. இருட்டும் வரை மாடுகள் அவ்வுடம்பைச் சுற்றி நின்றன. வீடுகளுக்குப் போக மனம் கொள்ள வில்லை.

நம் நாட்டின் வடகோடியில் உள்ள கயிலாய மலையிலே தவம்புரிந்த யோகி ஒருவர் அப்பொழுது இங்கு வந்தார். அவர் தென் கோடியிலே பொதிய மலையில் தவம் புரியும் அகத்திய முனிவரை வணங்க நினைத்து வந்து கொண்டிருந்தார். மாலை வேளையில் திருவாவடுதுறை அருகில் ஓடும் காவேரிக் கரைக்கு வந்து சேர்ந்தார். அப் புண்ணியர் மூலன் இறந்து கிடப்பதையும் மாடுகள் கண்ணீர்விட்டுக் கதறுவதையும் பார்த்தார். அவர் மனம் இளகியது.

தவத்தின் பயனாக அவர் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை அறிந்திருந்தார். தம் உடம்பை ஒரு மறைவிடத்தில் வைத்தார். அவ்வுடம்பிலிருந்து உயிரை வெளியே எடுத்து மூலன் உடம்புக்குள் நுழையச் செய்தார். மூலன் தூங்கி விழிப்பவன்போல் எழுந்தான். மாடுகள் இக்காட்சி கண்டு மகிழ்ந்து, துள்ளிக் குதித்து வீட்டுக்கு வழக்கம் போலத் திரும்பின. மூலன் பழைய மூலன் இல்லை. ஆகையால் அவன் தன் வீட்டுக்குப் போகவில்லை. ஊருக்கு வெளியே ஒரு மடத்தில் தங்கிவிட்டான். அவன் மனைவி மக்களும் சுற்றத்தாரும் ஊராரும் அவனை அழைத்துப் பார்த்து அவன் வாய் பேசாது இருந்ததுகண்டு போய் விட்டார்கள்.

யோகி உடம்பு கடவுள் செயலால் மறைந்துவிட்டது. மூலன் முன்போல் இறந்து விழவும் யோகி எழுந்து நடக்கவும் வழி இல்லாது போயிற்று. அதனால் மூலன் உள்ளே மனம் தூண்டியபடி கோவிலுக்குப் போனான். அங்கு அரசமரம் ஒன்று உண்டு. அம்மரத்தினடியில் தவம்புரிய அமர்ந்தான். அன்று முதல் திருமூல நாயனார் என்ற பெயர் வந்தது. கயிலாய மலையிலே தவம் புரிந்து பொதியமலை காணப் புறப்பட்ட யோகியே இப்பொழுது திருமூலராக இருப்பவர்.

திருமூலர் அரசமரத்தின் அடியில் மூவாயிரம் ஆண்டு தவம் புரிந்தார். ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் ஒரு பாட்டு அவர் பாடுவது உண்டு. சிறிய அளவில் நான்கு அடிகளோடு உள்ள அவர் பாட்டு மந்திரம் போலவே இருந்தது. மூவாயிரம் பாட்டுக்கள் பாடினர். அவை இப்பொழுது திருமூலர் திருமந்திரம் என்ற பெயர் பெற்று விளங்குகின்றன. கடவுள் கருணை, மனித வாழ்வு, நல்ல நெறி முதலிய பல உண்மைகளை நாம் திருமந்திரத்தில் காணலாம்.

திருமூலர் சிவன் அடியார்களில் ஒருவர். சிவன் அடியார் நாயனர் பெயர் பெறுவர். அறுபத்து மூன்று நாயனர் உண்டு என்று அறிகிறோம். அறுபத்து மூவருள் திருமூலர் ஒருவர் ஆவார். பெயோர்கள் பெருமையை நாம் அறியவேண்டும்.

| | | |
|---|---|---|
| திருவாவடுதுறை | புண்ணியம் | அருகிலே |
| முட்டி மோதுவது | நாயனர் | வட்டம் |
| திருவிடை மருதூர் | உலக அறிவு | பழக்கம் |
| கல்வி கேள்வி | மயங்கின | பக்கத்தில் |
| திருமந்திரம் | பொதிய மலை | பேணியது |
| கயிலாயம் | சோழ நாடு | சிவாலயம் |
| கரையோரம் | வாழ்நாள் | ஒழுங்கு |
| பொறுக்காமல் | வடகோடி | யோகி |

## கேள்விகள்

1. மூலன் எப்படி மாடு மேய்ப்பான்?
2. மாடுகள் அவனிடம் அன்பு கொள்ளக் காரணம் என்ன?
3. மாடுகள் மூலன் இறந்தபோது என்ன செய்தன?
4. யோகிக்கு என்ன வித்தை தெரியும்?
5. யோகி மூலன் ஆனது எப்படி?
6. அவர் ஏன் தம் உடம்புக்குள் திரும்பிப் போகவில்லை?
7. திருமூலர் எங்கே தவம் புரிந்தார்?
7. அவர் உலகுக்கு அருளிய திருவாக்கு எது?

## பயிற்சி

(1) வட கோடி, தென் கோடி, கீழ் கோடி, மேல் கோடி, என்ற சொற்களை வைத்த வாக்கியங்கள் எழுதுக.

(2) உலக அறிவு, கல்வி அறிவு, பெரியோர் பழக்கம் என்ற சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.

(3) யோகி, பேணுவது, ஒழுங்கு, மாடுகள் என்ற சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.

II மரநிழல், மரம் + நிழல் என்று பிரியும்.

ஆற்றங்கரை, ஆறு + கரை என்று பிரியும்.

கரையோரம், கரை + ஓரம் என்று பிரியும்.

பிரித்து எழுதுக. ஆற்று நீர், ஆற்றோரம், குளத்தங்கரை, கிணற்றுத் தண்ணீர், வேலங்குச்சி, ஆலம்பால், குளநீர்.

III கோடிட்ட இடங்களில் ஒரு சொல் வைக்க.

1. காலையிலே மாடுகள்——போகும்.
2. ————அவை வீட்டுக்கு வரும்.
3. மூலன்———மாடுகளை அடிப்பதில்லை.
4. உயிர் இழந்த——மாடுகள் சுற்றின.
5. யோகி மூலன்——நுழைந்தார்.
6. இடைய மூலன்——நாயனார் ஆனான்.
7. திருமூலர் திருமந்திரம்——பாட்டு உள்ளது.
8. கும்பகோணத்துக்கு—உள்ளது திருவாவடுதுரை.
9. திருவிடை மருதூர் ஒரு—— ஆகும்.
10. திருவாவடுதுறையில்——உண்டு.

# 6. நீர் நிலைகள்

தண்ணீர் நமக்குப் பலவகையில் உதவு கிறது. நாம் குடிப்பது தண்ணீர்; குளிப்பதும் தண்ணீர்; நாம் பயிர் வளர்க்கவும் தண்ணீர் வேண்டும். நெல்லோ கம்போ சோளமோ கீரையோ காய்களோ இவைகளை சமையல் செய்து உணவாக்கத் தண்ணீர் வேண்டும். இப்படி நமக்கு வேண்டிய தண்ணீர் எங் கிருந்து கிடைக்கிறது? அதுவரும் வழிகளை நாம் அறிய வேண்டாமா?

நாம் பூமியில் வாழ்கிறோம். பூமியைச் சுற்றி எங்கும் கடல் இருக்கிறது. கடல் நீர் உவர்ப்பாய் இருக்கும். வெயில் வேளையில் சூரிய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாக மாறுகிறது. ஆறுகள் குளங்கள் ஏரிகள் எல்லாம் வெயிற் காலத்தில் வற்றிப் போகின்றன. தண்ணீர் எல்லாம் வெயிலால் இழுக்கப்பட்டு வானத்துக்குப் போகிறது. வானத்திலே அது நீராவியாகத்திரியும். குளிர்ச்சி ஏற ஏற அது கருமை நிறம் பெறும். அப்பொழுது அதை மேகம் என்கிறோம். மேகத்திலே குளிர் காற்றுப் பட்டால் அது மழையாக இறங்கும். மழை என்பது கோடிக்கணக்கான நீர்த்துளிகள் வரும்தோற்றமே. மழை நீர்த் துளிகள் பூமி யில் வந்து விழுகின்றன.

பூமியில் பெய்த மழை வழிந்து ஓடு கிறது. மேட்டிலிருந்துபள்ளத் நோக்கிப்

போவது தண்ணீருக்கு இயல்பாம். மலை மேல் மழை பெய்தால் அது அருவியாகி, கீழே ஓடி வரும். நிலம் எல்லாம் ஓடிய மழை நீர் அங்கங்கே உள்ள பள்ளமான இடங்களில் தங்குகிறது. பூமியின் கீழும் இத் தண்ணீர் போய் விடும். கீழே போன தண்ணீர் கிணறு வெட்டும் பொழுது ஊறி வருகிறது. நாம் அதனை இறைத்து எடுக்கிறோம். குளங்கள் ஏரிகள் எல்லாம் ஓடாமல் நிற்கும் நீர் நிலைகள் ஆகும். கடல் என்பது இவைகளுக்கு எல்லாம் தாயான பெரிய நீர் நிலையாகும். ஆறுகள் ஓடும் இயல்பு உள்ளவை. மலையிலிருந்து புறப்பட்டுக் கடல் வரை ஆறுகள் ஓடுவது உண்டு.

நீர் நிலைகள் எல்லாம் நல்ல நீர் தரும் என்று நினைக்கக் கூடாது. நிலத்தில் உவர் மண், களிமண், அழுக்கும் குப்பையும் கலந்த மண், செம்மண், மணல் முதலியவை உண்டு. இருக்கிற மண்ணின் தன்மைக்கு ஏற்றபடி தண்ணீர் நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கும். மலையிலிருந்து வரும் அருவிநீர் மலை மருந்துகளோடு கலந்து வரும். அத் தண்ணீர் குளிக்கவும் குடிக்கவும் நல்லதேயாம். ஆற்றில் ஊற்றுக்கள் போட்டு வடிகட்டி எடுக்கும் தண்ணீரும் நல்லதே. அடிக்கடி இறைபடுகிற உப்பு இல்லாத கிணற்று நீரும் நல்லதே, மற்ற நீர் நிலைகளின் தண்ணீரைக் காய்ச்சியும் வடிகட்டியும் குடிப்பதே நல்ல பழக்கம்.

தண்ணீர் என்று சொன்னவளவில் எதையும் குடிக்கலாம் என்று நினைக்க கூடாது. அழுகற் பண்டம் ஊறிக்கிடக்கும் குளங்களின் நீரை ஒரு போதும் குடிக்க லாகாது. அப்படி உள்ள தண்ணீரைக் குடித்தால் நோய்வரும். நல்ல நீரை எடுத்தே நமது உணவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

கிராமங்களில் வாழும் மக்கள், நல்ல தண்ணீர் வேண்டும் என்றால், கண்மாய் குளம், கிணறுகள் இருக்கும் இடம் தேடிப் போகிறார்கள். கடற்கரை அருகில் இருந்தா லும் அங்கங்கு நல்ல நீர்க் கிணறுகள் இருப் பது உண்டு. ஊர் முழுதும் உப்பு நீராய் இருக்க முடியாது. வீட்டுக் கிணறு உவர் நீர் உள்ளதாய் இருந்தால் பெண்கள் நெடுந் தொலை நடந்தாவது தண்ணீர் கொண்டு வருவார்கள்.

நகரங்களில் குழாய் வழியே தண்ணீர் வருவதைப் பார்க்கிறோம். இந்தக் குழாய் களுக்குத் தண்ணீர் எங்கிருந்து வந்தது என்பதை நாம் அறியவேண்டும். தண்ணீர் எடுக்கும் இடம் கெட்டது என்று தெரிந் தால் குழாய்த் தண்ணீரை நாம் சமைய லுக்கோ குடிப்பதற்கோ எடுக்கக்கூடாது. குழாய்க்குள் எத்தனை நாள் அழுக்கு இருக் கும் என்பதையும் நினைத்துப் பார்க்கவேண் டும். குழாய் வழியே வரும் தண்ணீர் சுவை யோடு இருந்தாலும் நாறுமல் இருந்தாலும் காய்ச்சியே குடிப்பது நல்லது.

| | | |
|---|---|---|
| குடிப்பது | தோற்றம் | நெடுந்தொலை |
| செம்மண் | குளிப்பது | நாருமல் |
| நீர்த்துளி | ஊற்று | வளர்ப்பது |
| உணவு | மேகம் | இறைபடும் |
| அருவி | சமையல் | உவர்மண் |
| அழுகல் | சோளம் | கீரைகள் |
| உவர்ப்பு | கண்மாய் | குழாய்வழி |
| நீராவி | களிமண் | மலைமருந்து |

### கேள்விகள்

1. நீர் நிலைகள் நான்கின் பெயர் சொல்லுக.
2. மேகம் எப்படி உண்டாகிறது?
3. மண்ணில் எத்தனை வகை உண்டு?
4. தண்ணீர் எங்கே கெட்டதாய் இருக்கும்?
5. நாட்டுப் புறத்து மக்கள் தண்ணீர் பெறுவது எப்படி?
6. நகர மக்கள் தண்ணீர் பெறுவது எப்படி?
7. குழாய்த் தண்ணீரில் என்ன தீமை உண்டு?
8. தண்ணீரில் உள்ள தீமையைப் போக்குவது எப்படி?

### பயிற்சி

I. மண், நீர், குளம் என்பவை பெயர்ச் சொல். இப் பாடத்திலிருந்து ஆறு பெயர்ச் சொல் எடுத்து எழுதுக.

II. ஓடுகிறது, நின்றது, வந்தது எடுபவை வினைச் சொல்.

இப்பாடத்திலிருந்து நான்கு வினைச் சொல் எழுதுக.

III. 1. முற்றுப்புள்ளி வரும் வாக்கியம் நான்கு எழுதுக.

2. வினக்குறி வரும் வாக்கியம் நான்கு எழுதுக.

3. நல்லது × கெட்டது (எதிர் மொழி.) உயர்வு. பெருமை, வரவு என்பவைகளுக்கு எதிர் மொழி எழுதுக.

# 7. நல்ல மழை

நல்ல மழை பெய்ததனால் நாடெலாம் செழித்தனவே
மெல்லவரு தவளைகளும் மேளமிட்டுக் கொழித்தனவே 1

நிலமெல்லாம் குளிர்ந்ததுவே நீர்நிலைகள் நிரம்பினவே
புலமெல்லாம் நெற் பயிரும் புல்வகையும் பரம்பினவே 2

வாரிகளில் வழிந்தோடி வருவதே பெரு வெள்ளம்
ஏரிகளில் வாய் வழியதே ஏறியதே வரு வெள்ளம் 3

ஆறுகளில் இரு கரையும் அலைமோதி யோடுவதே
சேறுபடி வழிகளெல்லாம் செந்தண்ணீர் நீடுவதே 4

நாற்று வகை நடுவாரே நல்ல பயிர் செய்வாரே
ஊற்றுவரு நீரினையும் ஓடெடுத்துப் பெய்வாரே 5

காய்ந்தவுயர் மரங்களெல்லாம் கதிரவனை வென்றனவே
சாய்ந்த பயிர் வகையெல்லாம் தலை தூக்கி நின்றனவே 6

பூவாத மரங்களெலாம் பூத்து மலர் சொரிந்தனவே
காயாத மரங்களெலாம் காய் கனிகள் தெரிந்தனவே 7

காட்டுச் செடி புதர்கள் கை காட்டி யழைத்தனவே
நாட்டுக் கொடி மரங்கள் நலமாகத் தழைத்தனவே 8

ஏரைப் பிடிக்கின்றார் இளநாற் றெடுக்கின்றார்
நீரைத் தடுக்கின்றார் நேரே கொடுக்கின்றார் 9

வானம் வழங்கிய நல் மழையை மிகப் புகழ்கின்றார்
தானம் வழங்குகிறார் தராதவரை யிகழ்கின்றார் 10

காரைத் தொழுகின்றார் காலத்தைப் போற்றுகின்றார்
ஏரைத் தொழுகின்றார் எங்கு நலம் சாற்றுகின்றார் 11

பயிர்களெலாம் வளர்வதற்கே பருவ மழை வேண்டு
மென்றே
உயிர்களெலாம் கருதுவதை யுணர்ச்சியொடு காண்டு
மன்றே 12

பாசம் வரு நீரை யெல்லாம் பார்த்தொதுக்கித் தள்ளுவரே
தேச நலம் பெற நன் நீர் தேங்க வைத்துக் கொள்ளுவரே

வானம் கறுப்பதற்கும் மழை மாரி வந்ததற்கும்
தானம் வளர்வதற்கும் தருமங்கள் தந்ததற்கும் 14

எம் செயலில் ஒன்றுமில்லை எல்லாம் அவன் செயலே
நம் செயலோ அவனருளை நாடும் தவம் செயலே. 15

# 8. வீரமும் அறிவும்

வீரம் ஒரு சிறந்த குணம். அறிவு அருமையான செல்வம். இந்த இரண்டும் சேர்ந்து வருவது நல்லது. வீரம் உள்ளவர் அறிவும் பொருந்தியிருப்பது பொன்மலர் மணமும் பெற்றது போல ஆகும். முன் காலத்தில் நம் நாட்டில் எத்தனையோ வீரர் இருந்தனர். அறிவு மிக்கவர் எத்தனையோ பேர் இருந்தனர். இன்றும் பல பெரியோர் இருக்கிறார்கள்.

வீரருக்குள் தலைவராய், அறிவும் பொருந்தி, நல்ல குணங்கள் எல்லாம் அமைந்து, ஒருவர் இருந்தார். அவர் மராட்டா மன்னர் சிவாஜி ஆவார். அவர் இளம் பருவத்திலே கல்வி கற்கவில்லை. தந்தை அரசாங்க பதவியில் இருந்தார். தாயே வளர்க்க வளர்ந்தார். தாய் இளஞ் சிங்கம்போலவே அவரை வளர்த்தாள்.

குழந்தை சிவாஜிக்குக் கதைகேட்பதில் விருப்பம் மிகவும் உண்டு. அவர் தாய் இராமாயணம் பாரதம் முதலிய கதைகளில் வரும் வீரர்களைப் பற்றிச் சொல்லுவாள். "இராமனைப் போல் நானும் ஆகவேண்டும். அர்ஜுனனைப் போல் நான் போரில் முன் செல்வேன். தருமனைப்போல் தருமம் தவறாமல் நடப்பேன். சீதையைப்போலவே நம் பெண்கள் இருக்கவேண்டும். பாவத்தை எதிர்ப்பேன்; புண்ணியத்தை வளர்ப்பேன்" என்று சிவாஜி நினைப்பார்.

கொஞ்சம் வயது ஆகியதும் சிவாஜி வில் வாள் வேல் முதலிய ஆயுதங்களைப் பழகினர். அக்காலத்தில் துப்பாக்கி பீரங்கி குண்டு முதலிய கொடிய கருவிகள் அதிகம் இல்லை. வீரர் எல்லாம் வில்லும் வாளும் பழகுவார்கள். அவ்வழியில் சிவாஜி சிறப்பு அடைந்தார்.



அந்நாளில் அவுரங்கசீப் மன்னர் இந்தியாவில் பெரிய அரசராய் இருந்தார். அவர் நாடு முழுதும் ஆளவே ஆசை கொண்டார். சிவாஜி ஒரு புதிய அரசு நிலைநாட்ட நினைத்தார். தமக்கு உதவியாக வீரர் பலரை அவர் சேர்த்தார். அவர் தாம் வாழ்ந்த மலை நாட்டில் உள்ள மராட்டியர்களை மெல்ல மெல்லப் போருக்குப் பழக்கினர். முதலில்

ஒரு மலைக் கோட்டையைப் பிடித்தார். அதில் ஒரு பெரும் புதையல் கிடைத்தது.

பணத்தின் உதவியில்லாமல் என்ன காரியம் ஆகும்? ஆள் சேர்க்கவும் ஆயுதம் திரட்டவும் உணவு தேடவும் காவல் அமைக்கவும் பணம் வேண்டாமா? எல்லா வகைக்கும் பணம் கிடைத்ததால் சிவாஜி முன்னேறினார். மேலும் பல கோட்டைகளைப் பிடித்தார். பெரிய சேனை ஒன்றைத் திரட்டி அதற்குத் தலைவர் ஆனார்.

சிவாஜியின் குணங்கள் எல்லாரையும் வசப்படுத்தின. அவர் பெருந்தன்மை உள்ளவர். தெய்வபக்தி மிக்கவர், வணங்கியவரை வாழவைப்பார். பெண்களை ஒரு நாளும் துன்பப் படுத்த நினையாதவர். போரில் பகைவர் பெண்கள் சிறையானால் அவர்களை மிகவும் மரியாதையோடு தாய் போல நடத்துவார். மந்திரிகளாக அறிவு மிக்க பெரியோர்களை அமர்த்தினார். விரைவில் முடிசூடி அரசர் ஆனார்.

சிவாஜி மன்னர் தமது படை வலிமையால் பல சிறு நாடுகளைப் பிடித்தார். மராட்டிய அரசை அன்று பெரிய மன்னராய் இருந்த அவுரங்கசீப் மன்னரும் ஒப்புக்கொள்ளச் செய்தார். பல ஆண்டுகள் தம் கீழ் வந்த நாடுகளை நன்றாக ஆண்டார்.

இளமையிலே தாயார் சொல்லிய கதைகளைக் கேட்டு இவர் பெரு மன்னர் ஆனார்.

விரருக்குள் ஒப்பற்ற வீரர் ஆனர். புத்தகப் படிப்பு அதிகம் இல்லாவிட்டாலும் சிறந்த அறிவுள்ளவர் ஆனர். தெய்வ பக்தியில் முதன்மை பூண்டு விளங்கினர். பவானி தேவி அவர் கண்கண்ட தெய்வமாம்.

சிவாஜியின் சரித்திரம் நம் இந்திய சரித்திரத்திலே ஒரு சிறந்த பகுதியாம். பம்பாய் மாகாணத்தில் மராட்டியர் மிகுதியாய் ஓங்கிவளர இம்மன்னர் செய்த முயற்சிகளை நாம் படித்து அறிய வேண்டும். ஒருவர் தமது மனத்துணிவால் ஒரு பெரிய அரசை நாட்டிய பெருமை இவர் சரித்திரத்தால் நமக்கு விளங்கும்.

மகாத்மா காந்தியின் உதவியால் இன்று நாம் சுதந்திர இந்தியாவில் வாழ்கிறோம். அக்காலத்தில் இருந்த நம் தலைவர்களில் சிவாஜி ஒருவர் என்பதை நாம் இன்று அறிய வேண்டும். இளம் பிள்ளைகள் சிவாஜி போல ஆகவே நினைக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| **வீரம்** | **மரியாதை** | **பெருந் தன்மை** |
| **படை** | **தருமன்** | **பொன் மலர்** |
| **நாட்ட** | **அமைக்க** | **நிலை நாட்ட** |
| **சிவாஜி** | **துப்பாக்கி** | **இளஞ்சிங்கம்** |
| **பீரங்கி** | **அர்ஜுனன்** | **பொருந்தி** |
| **திரட்ட** | **கொடிய** | **அறிவு மிக்கவர்** |

**கேள்விகள்.**

1. சிவாஜி என்ன குணம் உள்ளவர்?
2. அவர் படை சேர்த்தது எப்படி?

3. கதை கேட்டதால் அவர் பெற்ற நன்மை என்ன ?
4. அவர் கதைகளைப்பற்றி என்ன நினைப்பார் ?
5. மராட்டியர் வீரர் சிவாஜியை எப்படி மதித்தார்கள் ?

பயிற்சி.

மாற்றி எழுதலாம்.

I. 1. வீரம் ஒரு சிறந்த குணம்.
குணங்களில் வீரம் சிறந்தது.
2. அறிவு அருமையான செல்வம்.
செல்வங்களில் அறிவு அருமையானது.

மாற்றி எழுதுக.

1. பொறுமை உயர்ந்த குணம்.
2. கல்வி ஒப்பற்ற செல்வம்.
3. வணக்கம் நல்ல பழக்கம்.
4. துப்பாக்கி கொடிய ஆயுதம்.

மாற்றி எழுதலாம்.

II. 1. சிவாஜிக்குக் கதை கேட்பதில் விருப்பம் உண்டு.
சிவாஜி கதையை விரும்பிக் கேட்பார்.
2. தாய்க்கு அவரே செல்வம்.
தாய் அவரையே செல்வமாக நினைத்தாள்.

மாற்றி எழுதுக.

1. எனக்குத் தமிழ் படிக்கத்தெரியும்.
2. உனக்குப் பாடத்தெரியுமா ?
3. கழுதைக்கு மணம் தெரியாது.
4. அவனுக்குப் பணம் வேண்டுமாம்.

III. எதிர் மொழி வைத்து எழுதுதல்.

இவை போல.


வீரம் ஒரு சிறந்த குணம்.
உலோபம் ஒரு இழிந்த குணம்.

எதிர்மொழி வரும் வாக்கியங்கள் அமைத்து எழுதுக.

1. கடல் ஒரு பெரிய நீர் நிலை ஆகும்.
2. பீரங்கி ஒரு கொடிய படையாம்.
3. பொய் பேசுவது கெட்ட பழக்கம்.
4. காலையில் எழுவது சுறுசுறுப்புத் தரும்.

## 9 மிருகங்கள்

மிருகங்கள் பலவகை ஆகும். அவைகளில் சில நாட்டிலும் பல காட்டிலுமாக வாழ்கின்றன. ஆடு, மாடு, குதிரை, நாய் முதலியவை வீடுகளில் பழகும் நாட்டு மிருகங்கள். சிங்கம், புலி, கரடி, ஓநாய் முதலியவை



காட்டு மிருகங்கள். யானையும் காட்டில் வாழ்வதே. ஆயினும் அதனை நாட்டிலே பழக்கி வேலைகளுக்கு வைத்துக் கொள்ளலாம். மிருகங்களை விலங்குகள் என்றும் சொல்ல

லாம். அவைகள் எல்லாம் குட்டி போட்டுப் பால் கொடுக்கும் வழக்கம் உள்ளவை. அவைகள் நான்கு கால்களால் நடந்து செல்லும் பிராணிகள்.

நாட்டு மிருகங்கள் நம் வீடுகளில் பல வகையாக உதவுகின்றன. அவைகள் பெரும்பாலும் நமக்கு அடங்கி ஒடுங்கி நடக்கும் சாதுப் பிராணிகளாகவே இருக்கும். ஆடு மாடுகள் பால் கொடுக்கின்றன. வேளாண்மை செய்யவும் உதவுகின்றன. குதிரை வண்டி இழுக்கவும், கழுதை பொதி சுமக்கவும் உதவுகின்றன. அயல் நாடுகளில் குதிரை உழவுக்கும் உதவுவது உண்டு. கழுதைகளை வண்டிகளில் பூட்டுவதும் உண்டு. நாய் வீட்டைக்காக்க உதவும். ஆட்டுமந்தை மேய்ப்பவர் நாய்களை காவலுக்காக வைத்துக் கொள்வார்கள். எலிகளை ஒழிப்பதற்காகச் சிலர் பூனைகளை, வளர்ப்பதும் உண்டு. கீரிப்பிள்ளைகளையும் சிலர் வீடுகளில் வளர்ப்பது உண்டு.

காட்டு மிருகங்கள் காட்டில் தம் மனம் போனபடி வாழும். அவை பெரும்பாலும் கொடுமை உள்ளவை. காட்டு மாடு என்று ஒரு வகைமாடு உண்டு. ஆமா என்றும் அதற்குப் பெயர் உண்டு. அதனைப் பிடித்துப்பழக்க முடியாது. மிகுந்த கோபத்தோடு பாய்ந்து கொல்லும் குணம் அதற்கு உண்டு.காட்டில் வாழும் புலி காட்டின் ஓரங்

களில் புல்மேய வரும் ஆடு மாடுகளைக் கொன்று தின்னும். மனிதரைக் கொன்று தின்னப் பழகிவிட்டால் அந்தப் பழக்கத்தை விடாது. சிங்கம் பகல் எல்லாம் உறங்கி இரவில் வேட்டையாடி உண்ணும்.

காட்டு மிருகங்களை மனிதர் வேட்டையாடிக் கொல்வார்கள். சிங்கம் புலி கரடி சிறுத்தை முதலிய மிருகங்களை இளமையிலே பிடித்துப்பழக்கி வித்தை செய்பவர்கள் உண்டு. மிருகக்காட்சி சாலைகளில் இவைகளைக் கூண்டுகளில் அடைத்துவைப்பார்கள். வித்தை காட்டுவோர் கூண்டுகளில் இவைகளை வைத்துத் தக்க காவல் உள்ள இடத்தில் விட்டு, நான்கு பக்கமும் நிறைந்திருக்கும் மனிதர்கள் பார்க்கும்படி பலவகை வேடிக்கைகளைச் செய்து காட்டுவார்கள்.

யானையும் ஒட்டகமும் காட்டுமிருகம் தான் ஆகும். அவை இரண்டும் மனிதர்களிடம் பழகி, நல்ல உழைப்போடு வேலை செய்கின்றன. யானையை நன்கு பழக்கினல் அது மரங்களை அடுக்கிவைக்க உதவும். ஒட்டகம் பாலை வனங்களில் மூட்டை சுமக்க உதவும். நம் தேசத்தில் வட நாடுகளில் ஒட்டகம் வண்டி இழுக்கவும் உதவுகிறது. ஆடுகளையும் சிலர் வண்டியில் பூட்டுவது உண்டு. மனிதன் தன் அறிவின் துணைகொண்டு எல்லா மிருகங்களையும் தனக்குக்கீழ் அடங்கி நடக்கும்படி செய்கிருன்.

நமக்கு உழைக்கும் வீட்டு மிருகங்கள் நாம் உண்ணவேண்டிய நெல் சோளம் கம்பு கேழ்வரகு முதலியவை பயிருகும்படி உழுது பாடு படுகின்றன. நாம் ஒதுக்கிய வைக்கோல் பிண்ணுக்கு பருத்திக்கொட்டை முதலியவைகளையே உணவாகக் கொள்கின்றன. நமக்குப் பாலும் தயிரும் நெய்யும் கொடுத்து உதவுகின்றன. ஆகவே நாம் அவற்றை அன்போடு போற்றி வளர்க்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| மிருகங்கள் | பொதி | நாட்டில் |
| உழைப்பு | கரடி | பாலைவனம் |
| சிறுத்தை | அயல் | காட்டில் |
| பூட்டுவது | வித்தை | வடநாடு |
| ஓநாய் | ஒழிப்பது | கூண்டு |
| ஒதுக்கிய | சிங்கம் | ஆமா |
| காட்சி | சாது | வைக்கோல் |
| ஓரங்கள் | சாலை | பிண்ணுக்கு |

கேள்விகள்

1. நாட்டு மிருகங்கள் எவை?
2. காட்டு மிருகங்கள் எவை?
3, யானை நமக்கு எப்படி உதவும்?
4. ஒட்டகம் எப்படி உதவும்?
5. காட்டு மிருகங்களை எதற்காகப் பழக்குகிறார்கள்?
6. நாம் வீட்டு மிருகங்களை எப்படி வளர்க்க வேண்டும்?

பயிற்சி.

I. நாடு + மிருகம் = நாட்டு மிருகம்.
காடு + மிருகம் = காட்டு மிருகம்.

பிரித்து எழுது. ஓட்டு வீடு, எட்டுக்கட்டு.
ஆற்று மணல், நீற்றுப்பை, சோற்று மூட்டை.
மாட்டுக்கொட்டம். ஆட்டுக்குட்டி.
மூட்டுப் பூச்சி, ஈட்டுப்பொருள்.

சேர்த்து எழுது.

வேறு + ஊர், நாறு + கட்டு, பேறு + பொருள்.
கோடு + மாம், கூடு + கட்டு, பாடு + பயன்.
சிறு + எறும்பு, பெரு + ஆறு, ஒரு + அளவு.
கரு + எலி, நான்கு + கால், இரண்டு + கால்.
மூன்று + கால், ஐந்து + பொருள்.

## 10. தேசமும் உடையும்

நாம் வாழும் பூமி உருண்டை வடிவம் உள்ளது. அதன் மேற்பரப்பில் நாம் நாடு நகரங்களை அமைத்து வாழ்கிறோம். சில இடங்கள் மலைகளாகவும் காடுகளாகவும் இருக்கும். சில இடங்கள் ஆறு குளம் ஏரி கடல் முதலிய நீர் நிலைகளாகவும் இருக்கும். சில இடத்திற்கு ஏற்றபடி வெப்பமும் குளிர்ச்சியும் இருக்கும். பூமியின் வடகோடியும் தென் கோடியும் மிக்க குளிர்ச்சியுள்ள இடங்களாம். பூமியின் நடுப்பகுதி மிக்கவெப்பம் உள்ளது. மற்ற இடங்களில் வெப்பமும் குளிர்ச்சியும் அதிகம் ஆகாமலும் குறையாமலும் நடுத்தரமாய் இருக்கும்.

மனித வகையார் பூமியில் எல்லாப் பாகங்களிலும் வாழ்கிறார். நாம்வாழும் பகுதி வெப்பம் உள்ளது; குளிர்ச்சி குறைவானது. நம் நாட்டிலே மலைப்பக்கம் குளிர்ச்சி மிக்கது; வெப்பம் குறைவானது. வாழும் நிலத்திற்கு

ஏற்ற உடை எவருக்கும் வேண்டும் நம் நாட்டு மக்கள் பொதுவாக இடையில் ஒரு மெல்லிய துணியும் மேலே ஒரு சிறு துண்டும் அணிவது போதும். உடம்பை மறைக்க மெல்லிய துணியால் தைத்த ஒரு சட்டை போதுமானது. இந்தியா முழுதும் இந்த உடையே போதும் என்று கூறலாம்.



நம் நாட்டில் வியாபாரத்திற்காகவும் வேறு காரணங்களுக் காகவும் வெள்ளைக்காரர் வந்தார்கள். இவர்களை இன்னும் நாம் நம் நகரங்களில் பார்க்கிறோம். இவர்கள் என்ன விதமாய் உடை அணிகிறார்கள்? கால் வரை மறைக்கும் சட்டை அணிந்து, உடம்பில் இரண்டு மூன்று சட்டை அணிந்து தலைக்கும் தொப்பி வைத்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கு உடம்பைமூட இரண்டு

மூன்று சட்டைகள் வேண்டும். கால்களை மறைக்க இரண்டு வகையான சட்டை வேண்டும். முழங்கால்வரை காற்பட்டியும் அணிகிறார்கள். இவ்வளவுக்கு மேலே காலில் நன்கு மறைக்கும் சோடுகளை இட்டு நடக்கிறார்கள். இவர்கள் நாடுகள் குளிர் சிறிது அதிகம் உள்ளவை. ஆதலால் இவர்கள் இப்படி உடம்பை மறைக்க வேண்டி இருக்கிறது.

வடகோடியிலும் தென் கோடியிலும் பனி உறைந்த கடல்கள் உண்டு. பனிக்கட்டிகள் நிரம்பிய மலைகள் உண்டு. காலம் எல்லாம் பனிமயமாய் இருக்கும் நிலமும் உண்டு. அங்கு வாழும் மனிதர் எவ்வகையில் உடை பூணலாம்? கரடிகளை நாம் எப்பொழுதாவது பார்ப்பது உண்டு. அவை உடம்பு முழுவதும் மயிர் நிறைந்து, கம்பளி போர்த்து வருவது போல வரும். அப்படியே கரடித்தோல் போன்ற மயிர் அடந்த தோல்களை உடம்பு மறையப் போர்த்து அதனால் உடைகள் செய்து அணியவேண்டும். அந்த நாட்டுக்கு ஏற்ற உடை அதுவே.

இதனால், தேசத்தின் குளிர்ச்சி வெப்பம் முதலிய காரணங்களால் உடைகள் வெவ்வேறு வகையாய் இருக்கும் என்று அறிகிறோம். நமக்கு ஏற்றது நம் நாட்டு ஆடையே. வெள்ளைக்காரர் போலவோ பனி நாட்டு மக்கள் போலவோ நாம் உடை அணிய

நினைப்பது அழகுமில்லை, நலமுமில்லை. நல் வாழ்விற்கு உடையும் ஒரு துணையாம்.

| | | |
|---|---|---|
| மேற்பரப்பு | அணிய | உருண்டை |
| கால்பட்டி | பரப்பு | நாடு நகரம் |
| ஏரி கடல் | கம்பளி | வியாபாரம் |
| உறைந்த | ஆறுகுளம் | பனிபயம் |
| காரணம் | போர்த்து | மனித வகையார் |
| நடுத்தரம் | பனிநாடு | மலைப்பக்கம |

### கேள்விகள்

1. பூமியில் எப்பக்கம் குளிர் மிகுந்தது?
2. எப்பக்கம் வெப்பம் மிகுந்தது?
3. நாம் எவ்வகை உடை அணிகிறோம்?
4. வெள்ளைக்காரர் உடை எப்படி இருக்கும்?
5. பனி நாட்டார் என்ன உடை அணிவார்?
6. தேசங்களில் உடை மாறக்காரணம் என்ன?

### பயிற்சி.

I. கீழே உள்ள வாக்கியங்களில் முற்றுப்புள்ளி வினைக்குறி என்ற இரண்டுள் ஒன்றை இடுக.

1. கண்ணா நீ பாடம் படித்தாயா
2. வேலன் இப்பொழுது என்ன செய்கிறான்
3. மருதப்பன் மரம் ஏறுவானா
4. பொய் பேசுவதால் நன்மை விளையாது
5. ஏழைகளும் வாழவேண்டும்
6. செல்வம் உள்ளவர் உதவி புரியலாம்
7. யார் இப்படி செய்தவர்
8. போதும் இனி ஒன்றும் வேண்டாம்

II. இக்குறி இட்டது சரியா தப்பா?

1. நான் நடக்க மாட்டேன்?
2. நீ தாங்குகிறாயா?
3. அவன் ஏன் ஓடுகிறான்?
4. மெல்லிய ஆடை எனக்குப் போதும்?
5. கண்ணால் நான் பார்க்கிறேன்?
6. காதால் நான் கேட்பேன்?

III. பிரித்து எழுது.

நாற்காற் பிராணி, மூப்பத்து மூன்று,
அறுநூறு, ஏழாயிரத்தெண்ணூற்றிருபத்தைந்து,

சேர்த்து எழுது.

நான்கு + பத்து, மூன்று + பத்து + ஆறு,
எட்டு + நூறு + இருபது + நான்கு,
இரண்டு + பத்து + ஆயிரம்,

## 11. அரசு துறந்த பெரியோன்

நம் இந்தியா நாட்டின் வட பகுதியில் உத்தர கோசலம் என்ற ஒரு நாடு இருந்தது. அந்நாடு தசரதன் ஆண்ட நாடு; இராமன் ஆண்ட நாடு. அங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சுத்தோதனன் என்ற மன்னன் அரசாண்டு வந்தான். அந்த அரசன் வெகு காலம் குழந்தைகள் இல்லாதிருந்தான். அவனுக்கு மாயாதேவி கௌதமி என்று இரண்டு அரசிகள் உண்டு. இருவரும் குழந்தை இல்லையே என்ற கவலையில் மூழ்கி இருந்தனர்.

மாயாதேவிக்கு நாற்பது வயது ஆகும் போது ஒரு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த ஏழாம் நாளில் அப் புண்ணியவதி இறந்தாள். குழந்தையை அன்போடு வளர்க்கும் பொறுப்பு கௌதமிக்கு வந்தது. அக் குழந்தை கௌதமர் சித்தார்த்தர் என்ற பெயர்கள் பெற்றார். தந்தையும் தாயும் இச் செல்வக் குழந்தையை மிகவும் அருமையாகப் பேணி வளர்த்தார்கள்.

கௌதமர் இளமையில் தக்க உபாத்தியாயரிடம் கல்வி கற்றார். அரசகுமாரருக்கு வேண்டிய போர்த் தொழிலும் பழகினார். அவர் கல்வியும் அறிவும் வீரமும் கருணையும் அடக்கமும் பொறுமையும் பொருந்திய இளம் பிள்ளையாக வளர்ந்தார். உரிய பருவத்திலே அவருக்குத் திருமணம் நடந்தது. யசோதரை என்ற இளம் பெண்ணை அவர் மணந்து அரண்மனையில் இன்பமாக வாழ்ந்தார்.



கௌதமர் பிறந்த பொழுது ஒரு பெரியவர் அரசனைப் பார்த்து 'இக் குழந்தை ஒரு பெரிய ஞானியாக வேண்டும் உலகம் எல்லாம் வணங்கும் பெரியோன் ஆவான்' என்று கூறினார். சுத்தோதனன் இதைக் கேட்டு மிகவும் கவலைப்பட்டுத் தனது அருமை மகன் உலகத்தில் உள்ள துன்பங்களை அறியாத படி வளர்த்து வந்தான். மறைத்து வைத்தால் துன்பம் மறைந்து விடுமா?

அரண்மனைக்குள் அடங்கிவாழ்ந்த கௌதமர் ஒரு நாள் நகரின் காட்சிகளைக் காண வெளியே புறப்பட்டார் இன்பக் காட்சிகள் பல அவர் கண்ணிகளில்பட்டன.

காவற்காரர் அவர் முன் துன்பக்காட்சி வராதபடி பார்த்துவந்தனர். என்ன காவல் இருந்தாலும் ஒரு நோயாளியைப் பார்த்து விட்டார். நமக்கும் நோய்வரும் என்று அறிந்தார். மூப்பினல் தள்ளாடித் தளர்ந்து நடந்த ஒரு கிழவனைப்பார்த்தார். அவனைக் கண்டதும் நமக்கும் இந்த நிலைமை வருமே என்று நினைத்தார். அருகில் கிடந்த பிணம் ஒன்றைப்பார்த்தார். நாமும் ஒரு நாள் இந்த நிலைமை அடைவோம் என்று அறிந்தார். உலகம் எங்கும் இத் துன்பம் உண்டு என் பதை நினைத்து வருந்தினர்.

இவ்வகையான காட்சிகளைக் காணுமல் அரண்மனைக்குள் மறைந்து வாழ்ந்த தம் நிலைமையை நினைத்து வருந்தினர். உலகத் தில் மனிதர் பிறப்பதும் இறப்பதும் துன்பம் அடைவதும் இன்பம் அடைவதும் நோயால் வருந்துவதும் முதுமையால் தளர் வதும் ஏன் என்று நினைக்கப் புறப்பட்டார். மனத்தில் இந்த எண்ணம் நிலைத்ததால் அரண்மனை வாழ்வு அவருக்கு விருப்பமாய் இல்லை. உலகத்தில் உள்ள துன்பத்தை ஒழிக்க என்ன செய்யலாம் என்று எண்ணி நகர வாழ்வை வெறுத்து வெளியேறினர். அவருக்கு இளங்குழந்தை இராகுலன் அப் பொழுதுதான் பிறந்திருந்தான். குழந்தை யும் தாயும் உறங்கும் காட்சியைப் பார்த்தும் அவர் மனம் மாறவில்லை. அரண்மனை வாழ்வை மறந்து வெளியே வந்தார்.

காட்டுப்பக்கம் அவர் நடந்தார். காடுகளிலே பல பெரியோர்களைக் கண்டு தம் மனக்கவலையைச் சொன்னார். ஒருவராலும் அவர் மனக்கவலை ஒழியவில்லை. புத்த கயை என்ற புண்ணிய பூமியில் போதி மரத்தின் கீழே தவம் புரிந்தார். துன்பம், துன்பத்திற்குக் காரணம், துன்பம் போக்குதல், துன்பம் போக்கும் வழி என்ற நான்கையும் தெளிவாக அறிந்தார். உடனே தாம் பெற்ற மெய்யறிவை உலகத்திற்கு உதவ நடந்தார்.

பொன் போல் நிறம் உள்ள காவியுடை அணிந்து பலரைத் தம்மோடு சேர்த்து நாடெங்கும் நடந்து வந்தார். புத்தர் வருகிறார் என்று எங்கும் முழக்கம் எழுந்தது. அவர் எல்லா உயிர்களுக்கும் கருணை காட்ட வேண்டும் என்று எங்கும் சொன்னார். தம் நாட்டுக்கே வந்து தந்தை தாய் மனைவி மகன் எல்லோரையும் புத்தமார்க்கத்திலே சேர்த்தார்.

இந்தியாவில் இப்பொழுது புத்தமதம் குறைந்து விட்டது. சீனா, பர்மா, ஜப்பான் முதலிய நாடுகளில் அது இன்னும் நிலைத்திருக்கிறது. புத்தர் சொல்லிய புதுவழி பௌத்தமதம் என்று வழங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இம் மதம் நம் தேசத்தில் உண்டாயிற்று.

| | | |
|---|---|---|
| வடபகுதி | திருமணம் | விருப்பம் |
| உத்திரகோசலம் | யசோதரை | வெளியேறு |
| சுத்தோதனன் | அரண்மனை | மனக்கவலை |
| மாயாதேவி | பெரியவர் | புத்தகயை |
| கௌதமி | ஞானி | புண்ணிய பூமி |
| புண்ணியவதி | அருமைமகன் | மெய்யறிவு |
| உபாத்தியாயர் | இன்பக்காட்சி | காவியுடை |
| இளம்பிள்ளை | துன்பக்காட்சி | முழக்கம் |

### கேள்வி.

1. சித்தார்த்தர் இளமையில் எப்படி வளர்ந்தார்?
2. துன்பக்காட்சிகளை அவர் ஏன் காணாதிருந்தார்?
3. எவ்வகைத் துன்பங்களைக் கண்டார்?
4. அவர் மனம் என்ன அறிந்தது?
5. உலகத்திற்கு அவர் தந்த உண்மைகள் என்ன?
6. புத்த மதம் இப்பொழுது எங்கு வழங்குகிறது?

### பயிற்சி.

I. காட்டுப்பக்கம், நாட்டுப்புறம், அரண்மனை வாழ்வு, இன்பக்காட்சி, துன்பக்காட்சி. என்ற சொற்கள் வரும்படி வாக்கியங்கள் எழுதுக.

ஒரு சொல் வைத்து முடிக்க

II. 1. அவருக்குத் திருமணம்——
2. காட்டுப்பக்கம்——
3. குழந்தை அன்று தான——
4. புத்த கயையில் மெய்யறிவு——

## 12. அன்பு வழி

(பாட்டு)

வில்லை வளைத்து நின்றாய்—தோழனே
விண்ணையும் நோக்கி நின்றாய்
வில்லினில் அம்பு விட்டாய்—தோழனே
விர்ரென்றெழுந்ததுவே. 1

அம்பின் குறியைப் பாராய்—கௌதமா
அந்தோ புறுவினைப் பார்
அம்பு புகுந்ததனுல்—கௌதமா
அதோ விழுகிறதே. 2

சிறகடித்துக் கொண்டே—ஐயதோ
சிறு புறு விழவே
அற மறந்தனையே—தோழனே
அன்பு மறந்தனையே. 3

வேட்டையில் வில் வளைப்போம்—அதுதான்
வேந்தர் தொழிலில்லையோ
வேட்டை விரும்பிலையோ—கௌதமா
வேதாந்தம் பேசுகிருய். 4

இரத்தம் சிந்தியதே—இதனை
எப்படிக் காப்பதுவோ
இரக்கம் கொஞ்சமிலாய்—தோழனே
ஏதேதோ பேசுகிருய். 5

எய்தவன் நானலவோ—புறுவை
என்னிடம் தந்திடுவாய்
கைதொடல் வேண்டாமப்பா—கௌதமா
கண்ணீர் விடவும் வேண்டாம். 6

காக்கத் துணிந்து விட்டேன்—இனியிதைக்
காட்டிக் கொடுக்க மாட்டேன்
நோக்கம் எதுவெனினும்—தோழனே
நூறுமுறை தொழுவேன். 7

அன்பு வழி என்கிருய்—புறுவினை
ஆதரிப்பேன் என்கிருய்

என்பொருள் என்பதனைக்—கௌதமா
ஏனோ மறந்து விட்டாய். 8

துன்பம் தருபவர்க்கோ—வருமொரு
துன்பம் துடைப்பவர்க்கோ
என்றும் இது உரிமை—தோழனே
ஏனிந்த வீண் குழப்பம். 9

மன்னன் மகனலவோ—உனக்கெல்லா
வாக்கு வளமுமுண்டு
என்ன மொழி புகல்வேன்—கௌதமா
என்னையே நீ யெதிர்த்தாய். 10

புறுவை விட்டிடுவேன்—இதுவந்து
போன வுயிர் தளிர்த்தே
புறுவினத்தினிலே—தோழனே
போய்ப் புகுந்திடுமே. 11

வேட்டை விரும்பவில்லை—புறுவை
விடத் துணிந்து விட்டாய்
கேட்ட கதைகளெல்லாம்—கௌதமா
கேடில்லை யுண்மை யன்றோ. 12

என்ன கதைகள் கேட்டாய்—அவைகளை
இப்பொழுதே சொல்லுவாய்
மன்னன் மகனெனவே—தோழனே
மயங்க வேண்டா மப்பா 13

எல்லா உயிரிடமும்—மனத்தில்
இரக்கம் அன்பு கொள்வாய்
நல்லான் என வளர்வாய்—கௌதமா
நானென்ன சொல்லுவதே. 14

உயிர்கள் யாவையுமே—இன்பம்
உவப்ப துண்டனவோ
வெயில் பொறா அவையே—நிழலில்
மேவுவது உண்டு கண்டாய்.

### கேள்வி.

1. புறா எப்படி விழுந்தது?
2. கௌதமர் அதை எனன செய்தார்?
3. தோழன் ஏன் அதைக் கேட்டான்?
4. கௌதமர் புறா யாருக்கு உரியது என்றார்?
5. இக்கதையால் விளங்கும் நீதி என்ன?

### பயிற்சி.

1. இந்தக் கதையைச் சிறு வாக்கியங்களாக எழுதுக?
2. இந்தக் கதையை வாயாற் சொல்லுக.

## 13. உழவின் உயர்வு

மனிதர் பலவகையான தொழில் செய்து பிழைக்கிறார்கள். சிலர் வியாபாரம் செய்கிறார்கள், வேறு சிலர் கைத்தொழில் செய்கிறார்கள். சிலர் வண்டி ஓட்டுகிறார்கள்; சிலர் கப்பல் ஓட்டுகிறார்கள். என்ன தொழில் செய்தாலும் கூலி கிடைக்கும். கூலி பணமாய் இருக்கும். பணத்தால் வயிறு நிறையுமா? பசி அடங்குமா? மண்ணைத் திருத்தி உழுது பயிர் செய்யும் தொழில் தான் உணவு கொடுக்கக் கூடியது.

நாம் உயிர் வாழ உணவு வேண்டும். உணவு எங்கிருந்து வருகிறது? காடுகளில் இருந்து எடுத்து வர முடியுமா? நெல்லும், சோளமும், கேழ்வரகும், கோதுமையும்

கடைவீதிக்கு எப்படி வந்தன? இவை எல்லாம் நிலத்தை உழுது பாடுபட்டால் விளையுமா? உணவு வேண்டும் என்று நினைக்கிற எல்லாரும் உழப்போவது இல்லே. சிலர் தான் இரவும் பகலும் மண்ணேடு பாடு படுகிருர்கள். அவர்கள் செய்யும் தொழில் பயிர்த் தொழில் ஆகும். உண்மையில் அது



உயிர்த் தொழில் ஆகும். உழவர்கள் தாமும் வயிருற உண்டு, மற்றவர்களுக்கும் உணவு தேடித் தருகிருர்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது பெரியோர் கொள்கையாம்.

உழவர்கள் நிலங்களே உழுகிருர்கள். கட்டிகள் கரையும்படி மண்ணேக் கிளறுகிருர்கள். கீழ்மண் மேல் மண் ஆகும்படி வெட்டி

விடுகிறார்கள். குப்பையைப் போடுகிறார்கள். குழைகளைக் குவிக்கிறார்கள். தண்ணீர் பாய்ச்சி நிலத்தை சேறு செய்கிறார்கள். சேற்றிலே பரம்பு அடிக்கிறார்கள். நாற்றங் காலில் நாற்றுகளை வளர்க்கிறார்கள். பருவம் பார்த்து நாற்று நடுகிறார்கள்; களைபிடுங்கி வேண்டிய அளவு தண்ணீர் பாய்ச்சுகிறார் கள். நிலத்திற்கு வேலி போட்டுக் காவல் காக்கிறார்கள். சிலமாதம் ஆனதும் நெல் முற்றிக் கதிர் காயும் காட்சியைப் பார்க்கிறார் கள். கதிர்களை அறுத்துக் கட்டுகிறார்கள். கதிர்க் கட்டுகளைக் களத்திலே அடித்து நெல்வேறு வைக்கோல்வேறாகப் பிரிக்கிறார் கள். நமக்கு நல்ல அரிசி வேண்டும் என் பது தெரியும் அந்த அரிசி வருமுன்பு எத்தனை பாடு பட வேண்டும் என்று அறிய வேண்டாமா?

உணவுப் பொருளில் எத்தனையோ வகை உண்டு. எல்லாம் நிலத்திலே பயிரா கித்தான் வர வேண்டும். காய் பழம் முத லிய எல்லாம் மண்ணில் உழைத்தே எடுக்க வேண்டியவையாம். நம் உடைக்கு வேண் டிய பருத்தி மண்ணில் விளைகிறது. பருத்தி, கடலை, எள்ளு, கொள்ளு முதலியவை புன் செய்ப் பயிர் ஆகும். நெல் கரும்பு முதலி யவை நன்செய்ப் பயிராம். எப்பயிரும் பாடு படாமல் வராது.

பெரிய மாளிகை கட்டி வாழலாம். தங்க மும் வெள்ளியும் வீடு நிறைய வைக்க

லாம். இரும்பாலும் கல்லாலும் மரத்தாலும் வீட்டை அழகு பண்ணலாம். எத்தனை செல்வம் இருந்தாலும் வீட்டுக்குள் நெல் கோதுமை முதலியவை இல்லையென்றால் நாம் உயிர் வாழ முடியுமா? என்ன தொழில் செய்தாலும் என்ன வியாபாரம் செய்தாலும் கடைசியில் உணவுப் பொருள் தேடித்தானே ஆகவேண்டும்? ஆகவே உலகத்திலுள்ள தொழிலில் உழவுத் தொழிலே சிறந்த தொழிலாம். பயிர்த் தொழிலே உயிர்த் தொழிலாம் என்பதை நாம் அறிய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| பிழைக்கிறர் | கேழ்வரகு | குப்பைகள் | முற்றி |
| வியாபாரம் | கோதுமை | குழைகள் | அடித்து |
| கைத்தொழில் | கடைவீதி | நாற்றங்கால் | கொள்ளு |
| திருத்தி | பரம்பு | கதிர் | கிளறுகிறர் |

### கேள்வி.

1. பயிர்த்தொழில் உயிர்த்தொழில் ஆவது எப்படி?
2. உழவைப் பற்றிப் பெரியோர் கொள்கை யாது?
3. எத்தனை உழைப்பின் பிறகு நெல் வருகிறது?
4. என்ன தொழில் செய்தாலும் உழவன் கை பார்க்க வேண்டும் என்பது எதனால்?

### பயிற்சி.

I. பிழையுள்ளது எது? பிழையில்லாதது எது?

1. நிலத்தில் நெல் விழைகிறது.
   நிலத்தில் நெல் விளைகிறது.
2. உளவுத் தொளில் உயர்ந்தது.
   உழவுத் தொழில் உயர்ந்தது.
3. நாம் உயிர்வாழ உனவு வேண்டும்.
   நாம் உயிர்வாழ உணவு வேண்டும்.

4. உளவன் மன்னில் உளைக்கிருன்.
உழவன் மண்ணில் உழைககிருன்.

II. பிழைகளைத் திருத்தி எழுதுக்.

1. நான் திருவையார் போகிறேன்.
2. அவள் மருதைக்குப் போகிருள்.
3. கண்ணன் ஆத்திலே குளித்தான்.
4. பெரியவர் சொல்லைச் சிறியவர் கேட்பார்.
5. நள்ள பில்லைகள் பொய் சொல்லார்.

III. 1. ஏரினல் உழுகிரேம்.
2. ஏறினல் இறங்கவேண்டும்.
3- அரம் ஒரு கருவி.
4. அறம் செய்ய விரும்பு.
5. ஆற்றுப் பாலம் அழகாய் இருக்கும்.
6. தங்கப் பாளம் விலை அதிகம்.

மேற்காட்டியவைபோல் இச்சொற்களை வாக்கியங்களில் வைத்து எழுதுக.

ஆலம், ஆழம், குளம், குலம், வலம், வளம்.
நீளம், நீலம், ஆரோ, ஆரே, நீரோ, நீரே.
பேரோ, பேரே, வேரோ, வேரே.
(ஆர் நீர் பேர் வேர்)
(ஆறு நீறு பேறு வேறு)

## 14. மலர்கள்

மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய மலர்களைப் பார்க்கிரேம். சில பூக்கள் அழகு உள்ளவை; சில மணம் மிக்கவை. சில அழகும் மணமும் உள்ளவை. சில கொடியில் மலரும். சில செடியில் மலரும். சில மரத்திலே மலர்வது உண்டு. சில நீரில் வளரும். சில நிலத்திலே வளரும். மல்லிகை, முல்லை முதலியவை நிலத்திலே கொடியாகப் படரும் தாமரை, அல்லி முதலியவை நீரிலே கொடியாகப் படரும். ரோஜா

031(8) N49

நிலத்திலே செடியாக வளரும். மகிழ் நிலத்திலே மரமாக வளரும். தாழை புதராக வளரும்.

தாவரவகை எல்லாம் பூக்கும் இயல்பு உள்ளவை. பூக்காமல் காய்க்கும் மரம் ஒன்று இரண்டு உண்டு. வாழை மரத்தில் பூ உண்டு. கற்ருழையிலும் அழகான பூ உண்டு. புளிய மரத்திலும் பூக்களைப் பார்க்கலாம். மாமரத்திலும் பூக்கள் உண்டு. ஊமத்



146842

தம் செடியிலே பெரிய பூக்கள் பூப்பது உண்டு சூரியகாந்திச் செடியிலும் அகன்ற மலர் உண்டு எருக்கஞ் செடியில் நிறைய மொட்டும் பூவும் இருப்பதைப் பார்க்கிரேம். இவைகளை நாம் மலர்கள் என்று நினைப்பது இல்லை. தொடுத்து மாலைகளாகக் கட்டுவதும் இல்லை.

தாமரைப்பூ அழகும் மணமும் உள்ளது. மகிழம் பூ நறுமணம் மிக்கது. ரோஜாப்பூ

அழகும் மணமும் சிறந்தது. தாழம் பூவின் மடல்கள் முள்ளுக்குள் இருந்தாலும் நல்ல மணம் உள்ளவை. இப்படி உள்ள பூக்களையே நாம் மாலை கட்டவும் தலையில் அணியவும் விரும்புகிறோம். மலர் என்ற பெயர் மொட்டாயிருந்து மலர்கிற எல்லாப் பூவிற்கும் தகும் என்றாலும் மணம் உள்ளவையே மலர் என்று சொல்லப்படும்.

மலர்கள் இலைகளோடு ஒட்டிய காம்புகளிலும் சிறிய கணுக்களிலும் தோன்றும். சில மலர்கள் கொத்துக் கொத்தாய் மலரும். சில தனித் தனியாக மலரும். கொன்றை மரத்தில் ஒருவகை உண்டு. அதில் உள்ள பூங்கொத்து பொன்னிறமாக மாலை மாலையாகத் தொங்கும் மலர்களின் இதழ்கள் முதலில் மூடிக் குவிந்து இருக்கும். அந்த நிலையில் அவைகளுக்கு மொட்டு என்று பெயர். அரும்பு, முகிழ் என்ற பெயர்களும் அவைகளுக்கு உண்டு. இதழ் விரிந்ததும் மலர் என்ற பெயர் பெறும். போது என்ற பெயர் மலருக்கு முன்னுள்ள பெயர். அரும்பி முகிழ்த்துப் போதாகி மலர்வதே மலர் என்று சொல்லப்படும். மலர்களிலிருந்து காய்கள் பிறக்கும். காய்கள் பழுத்தால் பழமாம். மலர்வதுமலர்; காய்ப்பதுகாய்; பழுப்பது பழம் என்று நாம் அறியவேண்டும்.

மலர்கள் மணம் உள்ளவை; குளிர்ச்சி பொருந்தியவை. நம் நாட்டுப் பெண்கள் மலர்களைத் தொடுத்துத் தலையில் அணிவது

உண்டு. நாம் கொன்றை, பன்னீர் முதலிய மலர்களைப் பூசைக்கு எடுக்கிறோம். அலரிப் பூக்கள் பூசைக்கு உதவும். கதம்பம் கட்டும் போது அவை சேர்வது உண்டு. ரோஜாப் பூ பன்னீர் அத்தர் முதலிய மணப் பொருள் செய்ய உதவுகிறது. மணம் உள்ள பூக்க ளால் அத்தர் செய்வது உண்டு. மலரின் மணம் மனதிற்கு மகிழ்ச்சி தரும். மனம் மலர்ந்தால் முகம் மலரும் என்று சொல்வது உண்டு. முகத்திலே வரும் மலர்ச்சி மனத் தில் உள்ள இன்பத்தால் வருவதாம். சிலர் கடுகடுப்பான முகத்தோடு இருப்பது உண்டு. சிலர் முகம் துன்பத்தால் வாடி யிருப்பது உண்டு. இப்படி உள்ள முகங் களை மலர்ந்த முகம் என்று சொல்ல முடி யாது.

மலர்களில் பல நிறம் உண்டு. மல் லிகை வெண்மை நிறம் உள்ளது. ரோஜா சிவப்பு நிறம் உள்ளது. சாமந்தி மஞ்சள் நிறம் உள்ளது. மலர்களின் நிறமே கண்ணைக் கவரும். செடிகளிலும் கொடி களிலும் உள்ள பூக்களைத் தேடி வண்டு போகிறது. வண்டு போவதற்கு மலரின் மணமும் அழகுமே காரணம்.

மலரிலிருந்து தேன் வருகிறது. தேனீ தேனைத்திரட்டித் தன் கூட்டில் வைக்கிறது. நாம் அதை எடுத்து உணவுக்கு உபயோகப் படுத்துகிறோம். தேனீ வளர்ப்பதும் தேன் திரட்டுவதும் இப்பொழுது ஒரு குடிசைத்

தொழிலாக வளர்கிறது. பூச்செடிகளை நாம் தக்கபடி வளர்த்து அவற்றால் விளையும் நன்மைகளை அடையவேண்டும்.

| | | |
|---|---|---|
| மல்லிகை | மடல்கள் | அலரிப்பூ |
| முல்லை | மொட்டு | கதம்பம் |
| ரோஜா | அரும்பு | அத்தர் |
| தாழை | முகிழ் | மலர்ச்சி |
| தாமரை | போது | வாடுதல் |
| அல்லி | இதழ் | வண்டு |
| தாவரம் | கொன்றை | தேனீ |
| கற்றாழை | பன்னீர் | திரட்டு |

### கேள்வி.

1. கொடியில் மலரும் மலர் இரண்டு சொல்லுக.
2. செடியில் மலரும் மலர் இரண்டு சொல்லுக.
3. மரத்தில் மலரும் மலர் ஒன்று சொல்லுக.
4. புதரில் மலரும் மலர் ஒன்று சொல்லுக.
5. மலர்கள் எப்படி உதவுகின்றன.
6. பன்னீர் எந்த மலரிலிருந்து வருகிறது.

### பயிற்சி.

I. பூ என்ற சொல்லிலிருந்து பூக்கிறது என்ற வினை வரும்.

மலர்
காய் } இவைகளிலிருந்து வரும் வினைகளை எழுதுக.
பழம்

II. தாழை + பூ = தாழம்பு என்று சேரும், ரோஜா + பூ ரோஜாப்பூ ஆகும்.

மா + பூ, மல்லிகை + பூ, முல்லை + பூ, மகிழ் + பூ கொன்றை + பூ, தாமரை + பூ, எருக்கு + பூ முருங்கை + பூ, ——— இவை எப்படி சேரும்?

III. மலரிலிருந்து தேன் வருகிறது.

பாலில் இருந்து——— வருகிறது.
காயில் இருந்து——— வருகிறது.
மொட்டில் இருந்து——— வருகிறது.

## 15. மலர் கொய்தல் [பாட்டு]

1. மலர் பறித்திடுவோம்—நல்ல
மணமும் அழகும் குணமும் நிறைந்த
மலர் பறித்திடுவோம்.

2. மலர் பறித்திடுவோம்—உயர்
மல்லிகை சாமந்தி முல்லை இருவாட்சி
மலர் பறித்திடுவோம்.

3. அழகின் கொள்ளை யம்மா! இலை
ஆயிரம் சூழவே தூய செந்தாமரை!
அழகின் கொள்ளை யம்மா!

4. மணத்தின் செல்வம் அம்மா! செடி
மறைய மலர்ந்து நிறையும் ரோஜாவே.
மணத்தின் செல்வம் அம்மா!

5. சண்பகப் பூவினைப் பார்—மரத்
தலையில் மணத்தின் நிலையம் ஆவது
சண்பகப் பூவினைப் பார்.

6. தாழை மடல் மலரும்—மணம்
தாழைப் புதரெல்லாம் வாழப் புறப்படும்
தாழை மடல் மலரும்.

7. சூரிய காந்தி யடா—இது
சூரியன் பார்க்கவே நேரிலே மலரும்
சூரிய காந்தி யடா.

8. மகிழம் பூவிதுவே—உயர்
மரத்தில் மறைந்து மணத்தைப் பொழியும்
மகிழம் பூ விதுவே.

9. வண்டுகள் மொய்க்கு முன்னே—நல்ல
மலர்கள் கொய்வமே மலர்கள் கொய்வமே
வண்டுகள் மொய்க்கு முன்னே.

10. மாலை தொடுத்திடுவோம்—அருள்
வள்ளல் அணியவே மெள்ள அணிகுவோம்
மாலை தொடுத்திடுவோம்.

## 16. உலோகங்கள்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவைகள் உலோகங்கள் எனப்படும். உலோகங்கள் பூமியின் அடித்தளத்தில் மண்ணோடும் கல்லோடும் கலந்து கிடக்கும். மனிதர் அவைகள் இருக்கும் இடம் தெரிந்து, சுரங்கம் அமைத்து, அவைகளை வெளியில் எடுப்பார்கள். பிறகு கட்டிகளை உடைத்துக் கழுவியும் உருக்கியும் உலோகங்களைப் பிரித்து எடுப்பார்கள்.

பொன் உலோகங்களில் சிறந்தது. அதிகமாகக் கிடைக்காததால் அதிக விலையுள்ளது. பளபளப்பும் மஞ்சள் நிறமும் உள்ளது. மாலை, வளையல், மோதிரம் முதலிய நகைகள் செய்ய உதவுவது பவுன் முதலிய நாணயங்கள் செய்யவும் உதவுகிறது. அரசர் முடிகள் முன்காலத்திலே பொன்னால் அமைந்திருந்தன. நம் கோயில்களில் பொன்மயமான சில விக்கிரகங்கள் உண்டு. அக்கோயில்களில் பொன்மயமான பாத்திரங்கள் சில உண்டு. பொன் உயர்ந்த மருந்துகளுக்கு உதவும். பொன்னை உருக்கி அழுக்கு நீக்கிப் பொடியாகச் செய்து மருந்தில் கலப்பார்கள்.

வெள்ளி வெண்மை நிறம் உள்ளது. பொன்னுக்கு அடுத்த மதிப்பு உள்ளது. பாத்திரங்கள் செய்ய உதவுகிறது. கோயில்களில் வாகனங்கள் செய்ய வெள்ளித் தகடு உதவும். வெள்ளித் தகட்டாலே செய்த

தேர், விமானம் முதலியவை கோயில்களில் உண்டு வெள்ளியால் நாணயம் செய்ய லாம். இந்நாளில் நல்ல வெள்ளி நாணயங் கள் இல்லை.

செம்பு மங்கலான சிவப்பு நிறம் உள் ளது. செம்பினுல் தவலை, அண்டா, குடம் முதலிய பாத்திரங்கள் செய்வது உண்டு. செம்பினுல் ஆகிய பாத்திரத்தைப் புளியிட் டுத் தேய்க்கவேண்டும். நன்கு தேய்த்த செப்புப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் குடிப்பது நல்லது. செம்பும் மருந்துக்கு உத வக் கூடியது. தங்க பற்பம் செய்வது போலவே செம்பினுலும் பற்பம் செய்யலாம். கொடிய வியாதிகளுக்கு அது சிறந்த மருந் தாம். பற்பம் என்பது நன்றாய் நெருப்பிலே பல முறை உருக்கிச் செய்த பொடியாம். பொன்னையும் செம்பையும் புடம் போட்டு இந்த மருந்து செய்யப்படும். செம்பினுல் சிறிய மதிப்புள்ள நாணயங்கள் செய்யப்படு வது உண்டு.

இரும்பு மங்கலான கறுப்பு நிறம் உள் ளது. இது மண்ணிலிருந்து மிகுதியாகக் கிடைக்கிறது. இரும்பினுல் மண் வெட்டி, கோடரி, கலப்பையின் கொழு, அரிவாள், உளி கத்தி, ரம்பம் ஈட்டி, வேல் முதலிய கருவி கள் செய்யப்படுகின்றன. பூட்டுகளும் திறவு கோல்களும் இரும்பால் ஆமைகின்றன. சக்க ரத்தின் பட்டாவும் அச்சும் இரும்பால் ஆக வேண்டும் ஆணிகள், கீல்கள் முதலியவை

இரும்பால் அமையும். இரும்பினால் நீராவிக் கப்பல், புகை வண்டி, அச்சு யந்திரம் முதலிய புதிய எந்திரங்கள் செய்யப்படுகின்றன. இரும்பு தூணாகவும் செய்ய உதவும். நம் வாழ்விற்கு மிகவும் உதவும் உலோகங்களில் இரும்பே சிறந்ததாம். இரும்பிலிருந்தும் சிந்தூரம், பற்பம் முதலிய மருந்துகள் செய்யப்படும்.

ஈயம் பழுத்த வெண்மை நிறம் உள்ள உலோகம். சூடுபட்டால் எளிதில் உருகும் தன்மை உள்ளது. ஈயத்தால் பாத்திரங்கள் செய்யலாம். செம்பு பித்தளைப் பாத்திரங்களுக்கு வெள்ளீயம் பூசவேண்டும். காரீயம் பூச உதவாது. காரீயத்தால் ஆகிய பாத்திரங்கள் உணவின் நன்மையைக் கெடுக்கும்.

நாகம் என்பது ஒரு உலோகம். அது பார்வைக்கு ஈயம்போல் இருக்கும். அது பாத்திரம் செய்ய உதவுவதுண்டு. நிக்கல் என்ற உலோகம் நாணயம் செய்ய உதவுகிறது. செம்பும் நாகமும் கலந்தால் பித்தளை உண்டாகும். செம்பும் ஈயமும் கலந்தால் வெண்கலம் வரும். அலுமினியம் என்ற உலோகமும் தயாரிக்கப்படுகிறது. அது இந்நாளில் பல வகைகளாலும் உதவுகிறது. இன்னும் பல உலோகங்களும் உண்டு.

| | | |
|---|---|---|
| **உலோகம்** | **முடிகள்** | **அறிவாள்** |
| **பொன்** | **மதிப்பு** | **வெண்கலம்** |
| **வெள்ளி** | **பற்பம்** | **அச்சு யந்திரம்** |

| | | |
|---|---|---|
| செம்பு | புடம் | திறவுகோல் |
| இரும்பு | கொழு | அடித்தளம் |
| ஈயம் | கோடரி | பளபளப்பு |
| பித்தளை | மண்வெட்டி | பாத்திரங்கள் |
| நாணயம் | விக்கிரகம் | வாகனங்கள் |

### கேள்வி.

1. ஐந்து உலோகங்களின் பெயர் கூறுக.
2. பித்தளை செய்வது எப்படி?
3. வெண்கலம் செய்வது எப்படி?
4. பொன்னுக்கு விலை அதிகமாவது ஏன்?
5. பற்பம் செய்யத்தக்க உலோகங்கள் எவை?
6. மருந்து செய்ய உதவும் உலோகங்கள் எவை?
7. பாத்திரம் செய்ய உதவாத உலோகம் எது?
8. நாணயம் செய்ய உதவும் உலோகங்கள் எவை?
9. இரும்பினால் அமைந்த சில எந்திரங்களைக் கூறு.
10. விக்கிரகங்களை எந்த உலோகத்தால் செய்வார்கள்?

### பயிற்சி.

I. மனிதர் அவைகளை எடுப்பார்கள்
மனிதரால் அவைகள் எடுக்கப்படும்
கீழ் வரும் வாக்கியங்களை மேலே காட்டியபடி மாற்றி எழுதுக.

1. கண்ணன் வெண்ணெயைத் தின்றான்.
2. தட்டார் பொன்னை உருக்குகிறார்கள்.
3. கொல்லர் இரும்பை அடிக்கிறார்கள்.
4. தச்சர் மரத்தை அறுக்கிறார்கள்.

II. வெள்ளி வெண்மை நிறம் உள்ளது.
வெள்ளியின் நிறம் வெண்மை.
கீழ்வரும் வாக்கியங்களை மேலே காட்டியபடி மாற்றுக.

1. பொன் மஞ்சள் நிறம் உள்ளது.
2. இரும்பு கருமை நிறம் உள்ளது.
3. இலை பச்சை நிறம் உள்ளது.
4. பூ சிவப்பு நிறம் உள்ளது.
5. பருத்தி வெண்மை நிறம் உள்ளது.

III. செம்பும் ஈயமும் கலந்தால் வெண்கலம் ஆகும்.
செம்பை ஈயத்தோடு கலந்தால் வெண்கலம் ஆகும்.
கீழ்வரும் வாக்கியங்களை இப்படியே மாற்றுக.

1. செம்பும் நாகமும் கலந்தால் பித்தளை வரும்.
2. சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்தால் சிவப்பு நிறம் வரும்.
3. பொன்னும் செம்பும் கலந்தால் மதிப்புக் குறையும்.

## 17. கம்பரும் அரசரும்

காவிரி நதி பாயும் நாடு சோழ நாடு. முன்னாளில் இந்த நாட்டை ஆண்ட தமிழ் மன்னர் சோழர் எனப்படுவார்கள். அவர்களில் குலோத்துங்கன் என்ற பெயர் உடையார் மூன்று பேர் உண்டு. குலோத்துங்கர்களுள் ஒருவர் கம்பர் என்ற புலவரைத் தம் அரண்மனையில் வைத்து ஆதரித்தார்.

கம்பர் பெரிய தமிழ்ப் புலவர். அவர் வேளாளர் குலத்திலே பிறந்தவர். திருவழுந்தூரிலே இளமையில் வாழ்ந்தவர். இராமாயணம் என்ற பெருங்காவியத்தைப் பாடினார். அதனால் அவர் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்றார். குணம் சிறந்த அப்புலவரைச் சோழ மன்னர் மிகவும் மதித்து வந்தார். அரசரும் புலவரும் தமிழ்க் கல்வியின் சுவை அறிந்து அடிக்கடி கலந்து பேசி மகிழ்வது உண்டு.

ஒரு நாள் அரசரும் புலவரும் அரண்மனைப் பூஞ்சோலைக்குப் போனார்கள். அங்கு அரசர் திடீரென்று சிரித்தார்.

கம்பர்:- அரசே! சிரித்தது ஏன்? என்ன புதுமை கண்டீர்?

அரசர்:-புலவரே, நான் ஒரு மனிதன் தானே? ஆயினும் எத்தனை மக்கள் எனக்கு அடங்கி இருக்கிறார்கள்!

கம்பர்: அரசே! சோழ நாடு முழுவதும் உமக்கே அடக்கம். ஆனாலும் நீர் எனக்கு அடக்கம் என்று கூறுவேன்.



இதைக் கேட்டு அரசர் சினம் கொண்டார். புலவர் தம்மை அவமானம் செய்து விட்டார் என்ற வருத்தத்தோடு அரண்மனைக்குள் சென்றார். புலவரும் அரசர் மனமாறியதை அறிந்துகொண்டு மௌனமாகத் தமது வீட்டுக்குப் போனார்.

மறு நாள் அரச சபை கூடியது. அமைச்சரும் புலவரும் வந்து கூடினார்கள்.

அரசர் அப்பெருங் கூட்டத்திலே கம்பரை அவமானம் செய்ய நினைத்தார். அரசர் முகம் சிவந்தது. விழிகள் சிவந்து உருண்டன. மீசை துடித்தது.

அரசர்:-புலவரே! கவிச் சக்கரவர்த்தியே! கம்ப நாடரே! நான் உம்மை இங்கே கேட்கிறேன். எல்லாரும் அறிய இப்பொழுது உம் கருத்தைச் சொல்லும். நீர் எனக்கு அடிமையா? நான் உமக்கு அடிமையா? மாதந்தோறும் சம்மானம் பெறும் புலவர் நீரா? நானா? நான் யாரிடம் அடிமைப் பட்டிருக்கிறேன்? யாரிடம் கையேந்தி வாங்கிப் பிழைக்கிறேன்? புலவர்களை நம்பவே கூடாது. கொடுக்கும் ஒருவனைக் கர்ணன் என்று புகழ்வார்கள். கொடுக்காதவனை உலோபி என்று இகழ்வார்கள். சமயத்திற்குத் தகுந்தபடி பேசுவார்கள். ஆதலால் என்னையும் அடிமை ஆக்கக் கூடிய புலவராகிய நீர் இனி இவ்வூரில் இருக்க வேண்டாம். உமக்கு அடிமையாய் இருக்கும் அரசரைத் தேடிப்போகலாம். இன்றளவும் இங்கே பெற்ற மரியாதைகளையெல்லாம் திருப்பிக் கொடுத்து விடும்.

கம்பர்:-அரசே, நான் புலவன் என்பது உண்மையே. மன்னவர் நீர் என்பதையும் அறிவேன். மன்னனையும் புலவனையும் சீர்தூக்கிப் பார்த்தால், புலவனே சிறந்தவன் என்பது விளங்கும். உமக்கு இந்த நாட்

டிலே தான் மதிப்பு உண்டு. சேர நாட்டிலோ பாண்டிய நாட்டிலோ போனால் உம்மை யார் மதிப்பார்? வட நாட்டுக்குப் போனால் உம்மை வா என்று அழைப்பார் உண்டா? புலவருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு உண்டு என்பதை நானே விளக்கிக் காட்டுகிறேன். உலகத்தில் அரசர் நீர் ஒருவர் தானே? உலகம் எல்லாம் உம் நாடா? நான் எந்தத் திசைக்குத் திரும்பினாலும் வரவேற்க அரசர் உண்டு. இதோ புறப்பட்டேன். நீர் கொடுத்த சிறப்புக்களை உம்மிடமே கொடுத்துவிட்டேன். ஒரு வேளை என்றைக்காவது இங்கே வருவேனானால் இன்னொரு அரசன் எனக்கு ஏவல்பூணும்படி அழைத்து வருவேன்.

இப்படி பேசிய கம்பர் அங்கிருந்த அமைச்சரும் புலவரும் மனம் வருந்த உடனே வெளியேறினார். சிறிது காலம் கழித்து சொன்னபடியே செய்து காட்டினார். இதனால் புலவர் பெருமை நன்கு விளங்கும்.

| | | |
|---|---|---|
| காவிரி | புதுமை | புலவர் |
| முன்னாள் | காரியம் | உலோபி |
| சக்கரவர்த்தி | திடீரென்று | சீர்தூக்கி |
| குலோத்துங்கன் | அடக்கம் | சிறந்தவர் |
| திருவழுந்தூர் | அவமானம் | வட நாடு |
| இராமாயணம் | கர்ணன் | வரவேற்க |

### கேள்விகள்

1. சோழ அரசருள் ஒருவர் பெயர் சொல்லுக.
2. எத்தனை பேருக்குக் குலோத்துங்கர் என்ற பேர் உண்டு?
3. கம்பர் அரசரிடம் என்ன சொன்னார்?
4. அரசர் அவமானப்பட்டது எதனால்?
5. அரசர் புலவரை இழிவு படுத்த நினைத்தது எப்படி?
6. புலவர் அதற்கு என்ன மறுமொழி சொன்னார்?
7. இக்கதையில் வெற்றி யாருக்கு?

### பயிற்சி

I. சோழன் + நாடு சோழ நாடு என்று சேரும்.
பாண்டியன் + நாடு, சேரன் + நாடு, பல்லவன் + நாடு இவை எப்படிச் சேரும்?

II. தமிழ் + புலவர் தமிழ்ப் புலவர் என்று சேரும்.
மலர் + சோலை, இலை + கட்டு, வாய் + பூட்டு, வில் + பட்டி, தமிழ் + புத்தகம், தமிழ் + சுவை.

III. குடிகள் அரசருக்கு அடக்கம்.
குடிகள் அரசருக்கு அடங்கவேண்டும்.
கீழ்வரும் வாக்கியங்களை இப்படி மாற்றி எழுதுக

1. சிறியவர் பெரியவர்க்கு அடக்கம்.
2. அன்பர் கடவுளுக்கு அடிமை.
3. நாடு நமக்கு உரிமை.
4. தமிழ் நமக்கு இனிமை.

## 18. கிராம சுகாதாரம்

நம் இந்திய நாட்டில் நகரங்கள் நூற்றுக் கணக்கில் உண்டு. நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமங்களிலே தான் வாழ்வார்கள். கிராமவாசிகள் உழைப்பாலே தான் நாம் உணவு பெறுகிறோம். அவர்கள் நோய் இல்லாமல் வாழ்ந்தால் நம் நாட்டுக்கு நன்மை உண்டு. ஆகையால் கிராம சுகாதாரத்தைப் பற்றி நாம் எல்லோரும் நம்மால்

...வரை உழைக்கவேண்டும். கிராமவாசிகள் நோய் இல்லாமல் வாழ வழி செய்ய வேண்டும்.

கிராமங்களில் வீடுகளை மனம்போனபடி கட்டுகிறார்கள். கூரைக் குடிசைகளில் வாயில் ஒன்று இருக்கும். அந்த வாயிற் கதவை அடைத்துவிட்டால், குடிசைக்குள் காற்றோ வெயிலோ நுழைய வழிகிடையாது. குடிசைகளை ஒழுங்காகக் கட்டுவதும் இல்லை. ஒன்று கிழக்கே பார்க்கும். மற்றொன்றும் மேற்கே பார்க்கும். நடுவிலே சில பெரிய வீடுகள் புறப்படும். அவை சிறு வீடுகளுக்குக் காற்றோ வெயிலோ வராமல் தடுக்கும். தெருக்கள் நேராக அமைவதில்லை. இந்த நிலைமையால் கிராமங்களில் வாழும் மக்கள் சுகமாய் வாழ முடியவில்லை.

கிராம மக்கள் வீட்டுக்கு முன்னும் பின்னும் குப்பைகளைக் கொட்டுவது உண்டு. குப்பைக் குழிகள் இருப்பதில்லை. வீட்டுக்குள் குளித்தோ கழுவியோ விடும் அழுக்குத் தண்ணீர் தெருவெல்லாம் ஓடும். குப்பையின் நாற்றமும் கழிவு தண்ணீர் நாற்றமும் தெருவெல்லாம் வீசும். சில சில இடங்களில் இந்த அழுக்கு நீர் தேங்கித் தெருவிலே குட்டை குட்டையாக நிற்கும். தரையெல்லாம் ஊறிச்சேறாகக்கிடக்கும். அங்கங்கே கொசுக்களும் ஈக்களும் மொய்க்கும். இப்படி உள்ள இடங்களில் வீடுகட்டி வாழ்பவர்கள் நோயினால் வருந்துவது உண்மையே. வீடு

களையும் தெருக்களையும் நாள்தோறும் குப்பையில்லாமல் கூட்டிவைத்துவரவேண்டும். அழுக்குத் தண்ணீர் தேங்காமல் தெருக்களை அமைக்கவேண்டும்.

நாம் உயிர்வாழ நல்ல தண்ணீர் வேண்டும். குடிக்கவும் குளிக்கவும் சோறு சமைத்து உண்ணவும் நல்ல தண்ணீர் வேண்டும். அழுக்கு மிக்க கழிவு தண்ணீரில் நோய்ப் புழுக்கள் வளரும். அழுக்கு நீரில் குளிப்பதால் சொரி, சிரங்கு உண்டாகும். அதைக் குடிப்பதால் நரம்புச் சிலந்தி, வாந்தி பேதி முதலிய நோய்கள் உண்டாகும். கிராமங்களில் மனிதர் குளிக்கவும் குடிக்கவும் தனியான நீர் நிலைகள் வேண்டும். ஆடுமாடுகள் குளிக்க வேறு நீர் நிலைகள் வேண்டும்.

மாட்டுத் தொழுவங்களை வெளியே வீட்டுக்கு அப்பால் தனியாக அமைக்கவேண்டும். வாயிற்பக்கமும் மனிதர் படுக்கும் இடங்களுக்கு அருகிலும் மாடுகளைக்கட்டி வைக்கக் கூடாது. மாட்டுச் சாணமும் மூத்திரமும் பயிருக்கு நல்ல உரமாம். அவற்றை வீட்டில் திரட்டிவைத்தால் புழுக்கள் பெருகும். குப்பை கூளங்களைத் திரட்டி வீட்டுக்கு வெளியே போடுவதே நல்லது.

சுகாதார விதிகளை நினைக்காமல் நடப்பதால் கிராமங்களில் நோய்கள் வளரும். காலரா, பிளேக், மலேரியா முதலிய கொடிய வியாதிகள் வரும். பெரிய அம்மை போன்ற தொத்து நோய்கள் வளர இடம் உண்டா

கும். ஒருவருக்கு இந்நோய்களில் ஒன்று வந்துவிட்டால் ஊரெல்லாம் பரவிவிடும். இப்படி வரும் தொத்து நோய்களை ஊருக்குள் நுழையவிடாமல் ஒழிக்கவேண்டும்.

ஆடு மாடுகளுக்குச் சில சமயங்களில் தொத்து நோய்கள் வருவது உண்டு. ஆடு மாடுகள் நூற்றுக்கணக்கில் இந்த நோய்களால் அழியும். அதனுல் உழவுத்தொழிலும் கிராமவாழ்வும் சீர்கெடும். மனிதருக்கோ மாடுகளுக்கோ தொத்து நோய் வருவது தெரிந்தால் உடனே சுகாதார அதிகாரிகளுக்குத் தெரிவித்து அவற்றை ஒழிக்க வழி தேடவேண்டும்.

வைத்தியத்தில் இரண்டு வகை உண்டு. நோய்கள் வருமுன் காப்பது ஒருவழியாம். அவை வந்த பிறகு குணப்படுத்துவது மற்ருெரு வழியாம். மனிதருக்கு வைத்தியம் செய்வது ஒரு வழியாம். ஆடு, மாடு, குதிரை, நாய் முதலிய மிருகங்களுக்கு வைத்தியம் செய்வது வேறு வகையாம். நம் நாட்டில் கிராம வாசிகளே பலர் ஆகையால் கிராமங்களில் வரக்கூடிய நோய்களை வராமல் காக்க வழிகளை அறியவேண்டும். வந்த நோய்களைத் தக்க வழிகளால் போக்கவும் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **நகரங்கள்** | **குப்பைக்குழி** | **வாந்திபேதி** |
| **கிராமங்கள்** | **அழுக்கு நீர்** | **தொழுவம்** |
| **தேங்காமல்** | **மலேரியா** | **கிராம வாசி** |
| **கழிவு நீர்** | **காலரா** | |

சுகாதாரம் நோய்ப்புழு பிளேக்
ஆனவரை சொரி சிறங்கு தொத்து நோய்
மனம்போனபடி நரம்புச்சிலந்தி

### கேள்விகள்

1. நம் நாட்டிலே கிராம மக்கள் பலர் என்பது எதனுல் ?
2. கிராம வாசிகள் நமக்காக என்ன செய்கிருர்கள் ?
3. நாம் அவர்களுக்காக என்ன செய்ய வேண்டும் ?
4. கிராமங்களில் சுகவாழ்வு கெடுவது எதனுல் ?
5. தொத்து நோய் என்பது என்ன ?
6. ஆடு மாடுகளை நோய் இல்லாது போற்றுவதால் என்ன நன்மை ?
7. வைத்தியத்தில் இரண்டு வகைக் கூறுக.
8. கிராம வாசிகள் எவற்றை அறிவது நலம் ?

### பயிற்சி

I. கிராமத்தில் வாழ்பவன் கிராமவாசி.
நகரத்தில் வாழ்பவன்———
வனத்தில் வாழ்பவன் ———
தேசத்தில் வாழ்பவன்———
காசியில் வாழ்பவன்———
ஆகாயத்தில் வாழ்பவன்———

II. நோய் உள்ளவன் நோயாளி———
கடன் உள்ளவன்———
முதல் உள்ளவன்———
தொழில் உள்ளவன்———
படிப்பு உள்ளவன்———
உழைப்பு உள்ளன்———
பொறுப்பு உள்ள்வன்———
பாடு உள்ளவன்———
கூட்டு உள்ளவன்———
தேட்டு உள்ளவன்———

III. இருக்கும் பொருள் இருப்பு.
வந்த பொருள்———
சென்ற பொருள்———
அழியும் பொருள்———

இப்படியே மாற்றுக

VI. நாம் உயிர் வாழ நல்ல தண்ணீர் வேண்டும்.
நல்ல தண்ணீர் குடித்து நாம் உயிர் வாழ்கிரும்.

1. நன்கு வாழ நல்ல வீடு வேண்டும்.
2. நல்ல வாழ்வுக்கு நல்ல காற்று வேண்டும்.

## 19. நான் கிராமவாசி

நான் ஒரு கிராமவாசி நாட்டுப் புறத்தான் என்று என்னை அழைப்பது உண்டு. அந்தப் பெயர் வந்ததை நான் ஒரு பெருமையாகவே நினைக்கிறேன். என் ஊரின் நிலைமை எனக்குத் தெரியும். அதனை எந்தெந்த வழிகளில் சீர்திருத்தலாம் என்பது எனக்குத் தெரியும். நானும் என் தோழர்களும் எங்கள் கிராமத்தின் நன்மைக் காகவே எப்பொழுதும் உழைப்போம். கிராமத்தில் வாழ்வதால் நகரவாழ்வில் உள்ள நன்மைகள் இல்லையே என்று நான் வருந்துவது இல்லை.

எங்கள் ஊரின் பெயர் கோவிலூர். பெயருக்குத் தகுந்தபடி ஊரின் ஒரு பக்கத்தே பெரிய கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலில் நாங்கள் தினந்தோறும் கடவுளை வணங்கப் போவதுண்டு. ஆண்டுக்கு ஒருமுறை திருவிழா நடக்கும். அவ்விழாக்காலத்தில் எங்கள் ஊரில் உள்ள ஏழை பணக்காரர் எல்லோரும் ஒற்றுமையாக் கலந்து அவரவர் செய்யத்தகுந்த காரியங்களைக் செய்வோம். இளம் பிள்ளை

கள் கோயில்முன் சென்று பாட்டுக்கள் பாடுவதும் உண்டு. திருவிழாக் காலத்தில் சிறு பிள்ளைகள் கூத்துப் போடுவார்கள்.

ஊருக்கு அருகில் ஒரு சிறிய ஆறு ஓடுகிறது. அதற்கு உப்பாறு என்ற பெயர் உண்டு. ஆனால் தண்ணீர் கரும்பு போல் இருக்கும். வெயிற் காலத்தில் தண்ணீர் ஓடாது. அப்போழுது ஊற்றுப்போட்டு வேண்டிய தண்ணீரை எடுப்போம். மழைக் காலத்தில் தண்ணீர் இருகரைகளிலும் மோதி ஓடும். எங்கள் ஆற்றில் தண்ணீர் வீண் போகாமல் எங்கள் ஊர் நிலங்களுக்குப் பாய்கிறது.

உப்பாற்றுத் தண்ணீரை இருபக்கமும் கால்வாய் வெட்டி ஏரிக்கு அனுப்புகிறோம். உப்பாறு வற்றிவிட்டாலும் ஏரி வற்றுவதில்லை. ஏரியிலிருந்து சிறு குளங்களுக்கும் போவது உண்டு. கார்காலத்தில் நிரம்பிய ஏரி குளங்கள் கோடைகாலத்திலும் எங்களுக்கு உதவுவது உண்டு. நன்செய் நிலங்கள் மிகுந்த எங்கள் ஊரில் நாங்கள் இருபோகம் பயிர் செய்து நெல் விளைக்கிறோம். கரும்பும் பயிரிடுகிறோம். வெற்றிலையும் உண்டு.

நாங்கள் வேளாண்மையில் இறங்கும் போது ஒருவர்க்கு ஒருவர் உதவி புரிவோம். என் மாடுகளைக் கொண்டு அயலார் உழுவதும், அவர் வந்து என் வயலில் கதிர்

அறுக்க உதவுவதும் புதுமை இல்லை. அது எங்கள் ஊர் வழக்கம் என்றே கூறு வேன். இவ்வேலைக்கு கூலி கொடுப்பதும் இல்லை; வாங்குவாரும் இல்லை. ஆடு மாடு கள் எங்கள் செல்வம். விளைந்த விளைவு எங்கள் ஊருக்குக் கண்டு மிஞ்சும் மிஞ்சிய தானியத்தை அடுத்த ஊர்களுக்கும் நகரங் களுக்கும் வண்டிகளில் ஏற்றி அனுப்பு வோம்.

எங்கள் வீடுகள் எல்லாம் கூரை வீடு களே. உப்பாற்றின் கரையிலே தென்னை மரங் கள் உண்டு. சவுக்கு மரங்களும் வளர்ந்திருக் கும் மூங்கிற் புதர்களும் உண்டு. வீடுகட்ட எங்களுக்கு சுண்ணும்புசிமெண்ட் முதலியவை ஒன்றும் வேண்டாம். மண்ணும் மூங்கிலும் இரண்டுமே போதும். மாடி வீடுகளில் இல்லாத நன்மை எங்கள் குடிசைகளில் உண்டு. வெயிற்காலத்தில் வீட்டுக்குள் வெப்பம் இராது. குளிர் காலத்தில் குளிர் மிகுந்து தெரியாது.

பெரிய வீடு என்று ஒரு வீடு உண்டு. அவ் வீடு எங்கள் ஊரிலே பொரிய வீடு தான். அது வும் கூரைவீடே. அவ்வீட்டுக்கு உரியவர் ஊரின் பெரிய பணக்காரர் ஆவார். அவர் பரம்பரைப் பெரிய மனிதர். பெருந்தன்மை உள்ளவர். எங்களுக்குள் வம்பு வழக்கு ஒன்றும் இராது. ஏதேனும் உண்டானல் அவர் எளிதாகத் தீர்த்துவிடுவார். இன்ற

ளவும் நாங்கள் யாரும் வழக்காடும் பொருட்டு அயலூர்களுக்குப் போவதே இல்லை

எங்கள் ஊரில் ஒரு தபால் ஆபீசு உண்டு. ஒரு சிறு குடிசையில் அந்த ஆபீசு இருக்கிறது. ஒரு பள்ளிக்கூடமும் உண்டு. அந்தப் பள்ளிக்கூடத்தில் எங்கள் ஊர்க்குழந்தைகள் படிக்கிறார்கள். இரண்டு உபாத்தியாயர் வேலை பார்க்கிறார்கள். தலைமை உபாத்தியாயர் தான் தபால் ஆபீசையும் பார்த்துக்கொள்ளுகிறார். எங்கள் ஊரில் கட்சிகள் ஒன்றும் இல்லை. ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளும்கெட்ட வழக்கமும் இல்லை. நல்லதோ கட்டாதா எது வந்தாலும் நாங்கள் எல்லோரும் ஒன்றாகவே சேர்வோம்.

நானும் ஒரு சிறு பிள்ளை தான். பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன். நகரங்களில் படிக்கும் பிள்ளைகள் எங்கள் ஊரைப் பார்த்து நல்ல கிராமம் எப்படி இருக்கும் என்பதை அறியவேண்டும். விடுமுறை நாளில் எங்கள் ஊரைப்பார்க்க வரலாம் என்று நகரத்துப் பிள்ளைகளை நான் அழைக்க விரும்புகிறேன். வந்து பார்த்தால் எங்களால் நகரங்கள் பெறும் நன்மைகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| **கூத்து** | **ஏதேனும்** | **சீர்திருத்தலாம்** |
| **ஊற்று** | **திருவிழா** | **நகரவாழ்வு** |
| **பக்கம்** | **உப்பாறு** | **பணக்காரர்** |

| | | |
|---|---|---|
| பெருமை | கார்காலம் | உபாத்தியாயர் |
| பரம்பரை | பொறுமை | நாட்டுப்புறத்தான் |

பயிற்சி

I. கரும்பு போல் இருக்கும். = இனிப்பாய் இருக்கும். இனிப்பாய் இருக்கும் என்பதற்குப் பதிலாகக் கரும்பு போல் இருக்கும் என்று எழுதுகிறோம்.

இரண்டு சொல்லை ஒரு சொல்லாக்கி எழுதுக.

1. குழந்தையின் மழலை அமுதம் போன்றது.
2. தமிழ் மொழி நாவுக்குத் தேன் போன்றது.
3. கெட்டவர் நட்பு நஞ்சு போன்றது.
4. நல்லவர் நட்பு மருந்து போன்றது.

II. தனம் என்ற சொல் தன்மை என்ற பொருளில் வருகிறது.

கோடிட்ட இடத்தில் தகுந்த சொல் அமை.

சிறு பிள்ளைகளுக்குக் குறும்புத்தனம் உண்டு.

தூங்கு மூஞ்சிகளுக்கு——தனம் உண்டு

முரடர்களுக்கு—— தனம் உண்டு.

திருடர்களுக்கு——தனம் உண்டு.

அற்பர்களுக்கு——தனம் உண்டு.

III. உப்பு + ஆறு உப்பாறு என்று சேரும். கீழே யுள்ளவற்றை அவ்விதம் சேர். கரும்பு + ஆலை, இரும்பு + ஆணி, உடும்பு + ஒட்டம், குறும்பு + என் களிம்பு + இதுவா, விளிம்பு + அழகு.

## 20 காரைக்கால் அம்மையார்

காரைக்கால் ஒரு துறைமுக பட்டினம். இவ்வூரில் வியாபாரிகள் பலர் உண்டு. பல வருஷங்களுக்கு முன் தனதத்தன் என்ற ஒரு பெரிய வியாபாரி அங்கு வசித்து வந்தான். அவனுக்குப் புனிதவதி என்ற ஒரு பெண் இருந்தாள்.

புனிதவதி சிறு வயது முதல் சிவபக்தி உள்ளவள். அழகும், நற்குணமும் உடைய

வள். கல்வி கற்றுப் பண்டிதை ஆனாள். வயது வந்ததும் பரமதத்தன் என்ற வியாபாரியை மணந்தாள். இருவரும் அன்போடு வாழ்ந்து வந்தார்கள்,

ஒரு நாள் பரமதத்தன் தனக்குக் கிடைத்த இரண்டு மாம்பழங்களை வீட்டுக்கு அனுப்பினான். புனிதவதி பழங்களை வாங்கிப் பெட்டியில் வைத்தாள். அப்போது ஒரு சிவனடியார் பசியோடு வந்தார். வந்தவரைப் புனிதவதி அன்னமிட்டு உபசரித்தாள். கணவன் அனுப்பிய மாம்பழங்களில் ஒன்றை இலையில் இட்டாள். விருந்தாளி பசி தீர்ந்து சந்தோஷத்துடன் சென்றார்.

சிறிது நேரத்தில் பரமதத்தன் வீட்டுக்கு வந்தான். நீராடிச் சாப்பிட உட்கார்ந்தான். புனிதவதி மீதமாகவுள்ள ஒரு மாம்பழத்தை இலையில் இட்டாள். அவன் "உணவோடு மாம்பழத்தையும் இலையில் போடுவாயா?" என்று கேட்டான்.

புனிதவதி என்ன செய்வாள்! உள்ளே சென்று பரமசிவனை பக்தியோடு வணங்கினாள், கடவுள் அருளால் பக்கத்தில் ஒரு பழம் இருந்தது. எடுத்து வந்து மிகுந்த சந்தோஷத்தோடு கணவன் இலையில் இட்டாள். பரமபதத்தன் இந்தக் கனி அதிக இனிப்பாக இருப்பதைக் கண்டு "இது ஏது" என்றான். அவள் "ஈசன் அருளால் கிடைத்தது" என்று உண்மையைக் கூறினாள். "அப்படியானால் மற்றொரு கனியும் பெற்றுத்

தருக'' என்றான். புனிதவதி மறுமுறையும் உள்ள சென்று கடவுளை வணங்கினாள். அவள் கையில் ஒரு மாம்பழம் வந்து சேர்ந்தது. அதைக்கொண்டு வந்து கணவன் கையில் கொடுத்தாள். பரமதத்தன் கையில் வாங்கியதும் அது மாயமாய் மறைந்தது.

பரமதத்தன் 'இது என்ன அதிசயம்! இவள் மானிடப் பெண் இல்லை. தெய்வ அம்சம் பெற்ற பெண்ணே ஆவாள். இவளோடு நான் வாழ்வது இனித் தகுதி இல்லை'' என்று நினைத்தான். சில நாட்கள் கழித்து கப்பல் ஏறி வேறு நாடு சென்றான்.

புனிதவதி ''ஈசனே எனக்கு உன்னிடம் உள்ள பக்தியால் என் கணவன் என்னைப் பிரிந்தார். எனக்கு இந்த அழகுள்ள உடம்பு இனிமேல் தேவை இல்லை. நான் பேய் உடம்பை அடைய வேண்டும். உன்னை அடைந்து வணங்க வேண்டும்'' என்று வணங்கி வேண்டினாள். உடனே அவள் அழகு உடம்பு மறைந்தது. பேய் உடம்பைப் பெற்றாள்.

புனிதவதி பிறகு பேயுடம் போடு தலையால் நடந்து கைலாசம் அடைந்தாள். பரமசிவனும் ''அம்மையே வருக'' என்று அவளை அழைத்துத்தன் பக்கத்தில் இருத்தினார்.

காரைக்கால் அம்மையார் இன்று பரமசிவன் திருவடியின் கீழ் இருக்கிறாள்; நடனத்

தைப் பார்க்கிருள், ஆட்டத்திற்குத் தக்க படி பாடுகிருள்" என்று கூறுகிருர்கள்.

| | | |
|---|---|---|
| வியாபாரி | பரமதத்தன் | சிவனடியார் |
| நடனம் | காரைக்கால் | நற்குணம் |
| விருந்தாளி | அம்மை | புனிதவதி |
| பண்டிதை | துறைமுகம் | பட்டினம் |

### கேள்விகள்

1. புனிதவதி யார்?

2. பரமதத்தன் புனிதவதியை பிரியக் காரணம் என்ன?

3. புனிதவதி சிவனிடத்தில் எவ்விதம் பக்தி செய்தாள்?

4. பரமசிவன் புனிதவதிக்கு அருளிய வரங்கள் எவை?

### பயிற்சி

I. இக் குழந்தை, இ என்ற எழுத்து இந்த என்ற பொருள் தர வந்த சுட்டு எழுத்து.

வீடு, மாடு, கடல், மரம், நாடு, மலர் என்ற சொற்களின் முன் அ, இ என்ற எழுத்துக்களை வைத்து எழுதுக.

II. புனிதவதியார் என்ற சொல்லில் ஆர் என்பது மரியாதை குறிக்க வந்தது. அர், ஆர் என்பவை மரியாதை குறிக்க வரும்.

சாத்தன், நக்கீரன், நாகன் என்ற பெயர்கள் புலவர்கள் பெயர். மரியாதை குறிக்கும் எழுத்துக்களை வைத்து-இச் சொற்களை எழுது.

III. இந்தப்பழம் எப்படி இங்கே வந்தது?

இந்த வாக்கியத்தில் எப்படி என்ற சொல் கேள்வி கேட்க வருகிறது. அச்சொல்லில் எ என்ற எழுத்து வினு எழுத்து.

பின் வரும் வாக்கியங்களில் கேள்வி கேட்கும் சொற்களை எடுத்து எழுதுக.

1. புத்தகத்தை எடுத்தவர் யார்?
2. எவ்வூரில் நீ முன்பு படித்தாய்?
3. எதற்காக நீ ஓடினுய்?
4. நேற்று வந்தது நீயா அவனு?
5. ஓட்டத்தில் வென்ருயோ?
6. காரைக்கால் எங்கே இருக்கிறது?

## 21. ஒற்றுமை

ஒரு காட்டில் வேடன் ஒருவன் வசித்து வந்தான். அவன் பட்சிகளை வலை விரித்துப் பிடித்துக்கொன்று தின்றும் விற்றும் பிழைத்து வந்தான். ஒருநாள் அவன் வழக்கம் போல், வலையை விரித்து, தானியங்களை அங்கு இறைத்து வைத்திருந்தான். வலையின் நான்கு மூலைகளையும் பூமியில் முளைகள் அடித்து, அவற்றில் கட்டி வைத்து பக்கத்தில் மறைந்திருந்தான். தானியங்கள் சிதறிக்கிடப்பதை பட்சிகள் பார்த்து ஏமார்ந்து வந்து, இரை தின்ன உட்காரும் உடனே வேடன் பறவைகளைப் பிடிக்க ஓடும்போது அவை பறக்க எத்தனிக்கும் ஆனல் கால்கள் வலையில் சிக்கிக்கொண்டு தப்ப முடியாமல் வேடன் கையில் அகப்படும். இது தான் வலை வைத்துப் பட்சிகளைப் பிடிப்பதின் தந்திரம்.

வேடன் அப்படி மறைந்திருக்கும் போது ஒரு புருக்கூட்டம் அங்கு பறந்தது.

தரையில் ஏராளமான தானியங்கள் இறைந்து கிடைப்பதைத் பார்த்து அவை கீழே இறங்கின. வலையின் கீழ்ச் சென்று உட்கார்ந்து தானியங்களைப் பொறுக்கின. அப்பொழுது எல்லாப் புறாக்களும் வலையில் சிக்கிக் கொண்டன.



மறைந்திருந்த வேடன் ஓடிவந்தான். புறா அரசனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. மற்ற புறாக்களுக்கு அது பின் வருமாறு சொல்லிற்று. "வலையில் அகப்பட்டுக் கொண்டோம். வேடன் ஓடிவருகிறான். வலையை முளைகளில் கட்டியிருக்கிறான். தனித்தனியாகப் பறக்க ஆரம்பித்தால் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு நன்றாகச் சிக்கிக் கொண்டு வேடன் கையில் அகப்

பட்டு விடுவோம். ஆகையால் எல்லோரும் ஒரே மனதாகப் பறந்தால் வலை முளைகளுடன் பெயர்ந்து வரும். நாமும் பறந்து தப்பிக்கலாம்" மற்ற புருக்களும் இதற்கு சம்மதித்து, ஒரே மனதாகப் பறந்தன. முளைகள் பிடுங்கப்பட்டு விட்டதால், வலையுடன் உயரப் பறந்து வேடனிடமிருந்து அவை தப்பின. ஆகாரத்தையும் வலையையும் இழந்த வேடன் வருத்தத்துடன் வீடு திரும்பினுன் புருக்கள் வெகுதூரம் பறந்து சென்று, தங்கள் சினேகிதன் உதவியால் வலையைவிட்டு தப்பின. பாருங்கள்! புருக்களின் ஒற்றுமையை! ஒற்மையாலல்லவா வேடனிடமிருந்து அவை உயிர் பிழைத்தன! நாமும் ஒற்றுமையுடனிருந்தால் ஆபத்திலும் உயிர் பிழைக்கலாம்; சௌக்கிமாக வாழலாம்.

| | | |
|---|---|---|
| **வேடன்** | **தந்திரம்** | **சௌக்கியம்** |
| **வருத்தம்** | **தனித்தனி** | **ஒற்றுமை** |
| **சிக்குதல்** | **யோசனை** | |

**கேள்விகள்**

1, பட்சிகளைப் பிடிக்க வேடன் செய்யும் தந்திரம் என்ன?

2. புரு அரசன் கூறிய யோசனை என்ன?

3. இப்பாடத்தால் அறியும் நீதி என்ன?

4. வேடன் பட்சிகளை வலை விரித்துப் பிடித்துக் கொன்று தின்றும், விற்றும் பிழைத்து வந்தான். இந்த வாக்கியத்தை நான்கு வாக்கியங்களாக ஆக்கிக் கூறுக.

## 22. ஒற்றுமை [பாட்டு]

1. வீட்டு நலம் நினைத்தால்—ஒற்றுமை
வேண்டும் எனச் சொல்லி ஆண்டு பழகுவோம்
நாட்டு நலத்துக்குமே—ஒற்றுமை
நம்முள் இருப்பது நன்மை யெனச் சொல்வோம்.

2. ஊரிலே நான்கு குடி—அவருள்
ஒற்றுமை யிருந்தால் வெற்றி விளையுமே
நேரில் எதிர்த்து நின்றால்—ஐயோ
நின்ற குடி சையும் அன்றே அழியுமே.

3. பேசும் மொழிபலவே—அவற்றைப்
பேசுவோர் ஒன்றாகக் கூடுவதுண்டன்றோ
காசு பெருத்தவரே—கையிலே
காசிலா ஏழையை யேசியிகழ்வரே.

4. சாதி பல விதமாம்—அந்தந்த
சாதிப் பெருமையைச் சாதிக்க வேண்டுமாம்
நீதி நெறி பலவாம்—அங்கங்கு
நின்று வழக்காடி மன்றாட வேண்டுமாம்.

5. காக்கை கரைவதுண்டே—அவைகள்
கண்டவுணவினைக்கொண்டு மகிழுமே
சேர்க்கையில் நட்பு முண்டே—அவை செய்
செய்கையைக்கண்டு நாம் மெய்யை அறியலாம்.

6. ஆயிரம் மாடப்புறா - வலையில்
அன்று புகுந்தனசென்று பறந்தன
வாயினால் நாம் பேசுவோம்-பிறர்க்கு
வஞ்சகம் செய்யவே நெஞ்சில் நினைப்பமே.

7. எறும்புக் கூட்டங்களே-உணவு
எத்தனை ஒற்றுமை ஒத்தன தேடுமே
எறும்பும் நன்மை வெல்லும்-ஒற்றுமை
என்னும் குணத்தினால் உன்னும் உயர்வினால்.

8. கறையான் புற்றினிலே-அப்பப்பா
காணலாம் ஒற்றுமை நாணமே கொள்ளுவோம்
நிறையும் தேனீக்களே-ஒற்றுமை
நேயம்வளர்த்தன, தூயதேன் சேர்க்குமே.

9. ஒற்றுமை வெற்றி தரும்-அதனை
உள்ள படியிலே மெள்ள அறிகுவோம்
ஒற்றுமை கெட்ட தென்றால்-நன்மை
ஒவ்வொரு நாடுமே செவ்வி கெடுக்குமே.

## 23. அண்ணனும் தம்பியும்

சென்னைப் பட்டினத்தில் உள்ள முத்தியாலுப்பேட்டை உயர்தர கலாசாலையில் ஒரு சிறுவன் படித்து வந்தான். சித்தூர் என்ற சிறிய ஊரே அவனுக்குச் சொந்த ஊராம். கோடை காலத்தில் விடுமுறை வந்ததும் அவன் தன்னுடைய ஊருக்கு வந்தான். அவனுக்கு ஒரு சிறிய தம்பி உண்டு. அவன் சித்தூர் கிராமப் பள்ளிக்கூடத்தில் மூன்றும் வகுப்பில் படித்து வந்தான். அண்ணன் ஊருக்கு வந்ததும் சென்னையில் உள்ள புதுமைகளை அவன் அறிய விரும்பினான். ஒவ்வொன்றாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தான்.

**தம்பி** :- அண்ணா! நீ எப்பொழுது வருவாய், வருவாய் என்று வழி பார்த்திருந்தேன். எங்கள் உபாத்தியாயர் கோடை காலத்திலே சென்னைக்குப் போய், அங்குள்ள காட்சிகளை யெல்லாம் பார்த்து வரப் போவதாகச் சொன்னார். மாதக்கணக்காய்

ஒருவர் சுற்றிப் பார்க்கும்படி அங்கே என்ன புதுமைகள் உண்டு ? அவைகளைப் பற்றிக் கேட்க எனக்கு ஆசை உண்டு. உபாத்தியாயரைக்கேட்கலாம் என்றால் அவர் இப்பொழுதுதான் போயிருக்கிறார். இன்னும் ஒரு மாதம் கழிந்த பிறகே வருவார் நீ தான் அங்கிருந்து விடுமுறைக்கு வந்திருக்கிறாயே; உன்னிடமிருந்து அங்குள்ள புதுமைகளைப் பற்றிக் கேட்டு அறியலாம் என்று எண்ணுகிறேன்.



அண்ணன் :- தம்பி! சென்னை ஒரு பெரிய பட்டினம். கடற்கரையில் இருப்பதால் அதை நாம் பட்டினம் என்று சொல்லுகிறோம். சென்னைக் கடற்கரை மிகவும் அழ

குள்ளது. உலகத்திலேயே சிறந்த கடற்கரைகளில் அது ஒன்று. சென்னைக்கடற்கரையிலே அழகான துறைமுகம் ஒன்று இருக்கிறது. அங்கு அயல் நாட்டுக் கப்பல்கள் வந்து தங்கும். கப்பலில் வந்த பொருள்கள் கரையில் இறங்கும். கப்பலுக்குப் போக வேண்டிய பொருள்கள் மூட்டை மூட்டையாய் போகும் வெளி நாட்டிலிருந்து வரும் பொருள்கள் இறக்குமதி ஆகும். இங்கிருந்து போகும் பொருள்கள் ஏற்றுமதி ஆகும். பெரிய கப்பல்கள் கடலில் நிற்பதைப்பார்த்தால் பெரிய மாளிகைகளே மிதப்பது போல தோன்றும்.

**தம்பி:—** ஆகாயத்திலே விர் என்று ஓடுகிறதே. ஏரோப்ளேன் என்று நாங்கள் ஓடி ஓடிப் பார்க்கிறோமே! நீ சென்னையில் அவைகளைப் பார்த்தது உண்டா?

**அண்ணன்:—** ஆம் பார்த்திருக்கிறேன்; அவை இருக்கும் இடத்தையும் பார்த்திருக்கிறேன். மெல்ல மெல்ல ஆகாயத்தில் ஏறுவதும் இறங்குவதும் அழகாய் இருக்கும். பெரிய பறவை சிறகை விரித்துக் கொண்டு பறப்பது போலவே இருக்கும். அதை ஆகாய விமானம் என்று சொல்வது வழக்கம். பறக்கும் போது ஏற்படும் சப்தம் வெகு தூரம் கேட்கும். நீயும் கேட்டிருப்பாயே. இரண்டு பேர் முதல் எண்பது பேர்

வரை உட்காரும் விமானங்கள் உண்டு. ஆனால் வானத்தில் போகிறோமே என்று மனம் நடுங்காதவர்களே அவைகளில் போவார்கள். நீயும் நானும் புகை வண்டியிலே பயமில்லாமல் பிரயாணம் செய்கிறோம். எனக்கு ஆகாய விமானத்திலே பிரயாணம் செய்யும் துணிவு இன்னும் வரவில்லை. இதோ பார்! விமானம் மேலே பறக்கிறது. இது மதுரைக்குப் போகிறது.

**தம்பி :—** அண்ணா! புகை வண்டி என்று சொன்னபோது ஒன்று நினைவுக்கு வந்தது. அங்கு புகையும் நெருப்பும் இல்லாமல் ரயில் வண்டி ஓடுகிறதாமே! அது எப்படி ஓடும்.

**அண்ணன் :—** தம்பி! நல்ல கேள்வி கேட்டாய். அந்த வண்டிகள் மின்சார சக்தியால் போகின்றன. மழை பெய்யும்போது இடியும் மின்னலும் உண்டாகிறதை நீ பார்த்திருப்பாயே. அந்த சக்தியே இயந்திரங்களின் உதவியால் நமக்கு உதவுகிறது. மேலே சில கம்பிகளில் இந்த சக்தி ஓடும். அக்கம்பிகளோடு ஒட்டும் உதவிகளால் இவ்வண்டி ஓடுகிறது. சென்னையில் இப்படியே நகரம் எங்கும் 'டிராம்வண்டி' ஓடுகிறது. ஊரெல்லாம் விளக்கு எரிகிறது. படக்காட்சிகள் பார்க்கிறோம். மின்சாரத்தில் இன்னும்

எத்தனையோ புதுமை உண்டு. நான் சென்னைக்குப் போகும் போது உன்னை அழைத்துப்போய் அங்குள்ள சிறந்த காட்சிகளை யெல்லாம் காட்டுகிறேன்.

### கேள்விகள்

1. பட்டினம் என்று எதற்குப் பெயர்?
2. துறைமுகம் என்று எதற்குப் பெயர்?
3. சென்னைக் கடற்கரையின் சிறப்பு என்ன?
4. ஆகாயவிமானம் எதைப்போல் இருக்கும்?
5. மின்சார சக்தியால் ஆகும் இரண்டு தொழில் சொல்லு?
6. டிராம் வண்டி எவ்விதம் ஓடும்?

### பயிற்சி.

I. பட்டினம் என்ற பெயர் கடற்கரை யோரத்தில் உள்ள நகரங்களுக்கு வரும் பெயர்.

கீழ்க்கண்ட பெயர்களைப் பூர்த்தி செய்து எழுதுக.

மசூலி———தெலுங்கு தேசத்தில் உள்ளது.
காயல்———கீழைக்கடற்கரையில் உள்ளது.
காவேரி———காவேரி முகத்தில் உள்ளது
அதிராமன்———சோழநாட்டில் உள்ளது.

II. டிராம் வண்டி மின்சாரத்தால் ஓடுகிறது.
புகைவண்டி———ஓடுகிறது.
மோட்டார்வண்டி———ஓடுகிறது.
பாய்க்கப்பல்———ஓடுகிறது.
ஆகாயவிமானம்———பறக்கிறது.

III. மின்னுவது மின்னல் எனப்படும்.
வளைவது———எனப்படும்.
எறிவது———எனப்படும்.
கோணுவது———எனப்படும்.

IV. ஒருசொல் வைத்து வாக்கியம் முடிக்க.
புகைவண்டி———வாளத்தில் ஓடுகிறது.
கப்பல்———ஓடுகிறது.
ஆகாயவிமானம்———பறக்கிறது.
கட்டைவண்டி———போகிறது.

## 24. உழைப்பும் சோம்பலும்

பாட்டு

1. சோம்பித் திரிகின்ற பிள்ளைகள் நாட்டுக்குத்
துன்பம் தருகின்ற பிள்ளைகளே
சோம்பல் அறியாத பிள்ளைகள் அல்லவோ
சொக்கத் தங்கம் ஒரு நாட்டினுக்கே.

2. தூங்கி விழுவதும் சோம்பி யிருப்பதும்
சோர்வும் பிணியும் வருவிக்குமே
ஏங்கி வருந்தி யிளைக்கவும் செய்யுமே
எப்படிச் சோம்பி யிருந்திடலாம்

3. எறும்புக் கூட்டத்தைக் காண்பதும் இல்லையோ
எத்தனை பாடு படும் அவையே
எறும்புக் குள்ள வுழைப்பும் இல்லாமலே
எங்ஙனம் வாழலாம் பிள்ளைகளே.

4. தேனீயைப் பாருங்கள் தேனைத் திரட்டவும்
தேன் கூடு கட்டவும் சேர்ந்தவைகள்
தேனீ யாசிப்பைப் போற்றும் அழகினைச்
சிந்தனை செய்திட வேண்டு மன்றோ.

5. மண்ணுக் குள்ளிருக்கும் அற்பப்புழுவுமே
மண்ணில் அழுக்கை யெடுத் துழைக்கும்.
மண்ணிற் பிறந்த மனிதர் உழைப்பதில்
மண்பு முறக்கும் இளைப்ப துண்டோ?

6. மீன்கள் தண்ணீரிலே சோம்புவ தில்லையே
விண்ணிற் பருந்து குருவிகளும்
வான்கணக் கெண்ண நினைத்தரை போலவே
வட்ட மிடுவன கண்ட துண்டே.

7. உழைத்துக் களைத்துத்திரட்டும் நெல்லினை
உண்ணும் போதன்றோ மகிழ்ச்சி வரும்
தழைத்துச் செழித்த காய்கள் கனிகள்
தக்க வர்க்கன்றே பயன் தருமே.

8. வண்டிகள் ஓட்டியும் கப்பல் செலுத்தியும்
வந்த பொருள்கள் உழைப்பறவே
நொண்டிகள் ஆகி யிருப்பவர் கொள்வது
நோயை வளர்க்கும் வழியலவோ.

## 25. நான் தேசபக்தன்

இது என் வீடு. இது என் ஊர்; இது என் நகரம்; இது என் நாடு; இவர் என் உறவினர்; இவர் என் இனத்தவர்; இவர் என் நாட்டு மக்கள் என்ற எண்ணம் ஒவ்வொரு மனிதருக்கும் உண்டு. இந்த எண்ணம் கொள்ளாத மனிதர் மிருகங்களிலும் கேடானவர்; கல்லோ மண்ணோ மரமோ என்று நினைக்கத்தக்கவர். எனக்கும் என் நாட்டின் நினைவு உண்டு. எனக்குச் சொந்தமான புத்தகம் கற்பலகை முதலிய பொருள்கள் கூட என் ஆசைக்கு உரியவையாம். இன்னொருவன் என் புத்தகத்தை எடுத்தால் எனக்கு கோபம் வரும். ஒருவன் என் கற்பலகையைக் கீழே போட்டால் நான் என் கையை ஓங்குவேன். இது இயல்பான குணம்.

பூனை தன் குட்டியை நாம் தொட்டால் சும்மா இருக்குமா? நாய் தன் குட்டியை நாம் எடுக்கும் போது குரைக்காதா? மிகவும்

சாதுவான பசுமாடு கன்று போட்டதும், அதன் கன்றை நாம் போய்த் தொடவிடுமா? மிருகங்களுக்கு உள்ள இந்த உணர்ச்சி மனிதனுக்கு இருக்க வேண்டாமா? என் ஊர் சிறியஊராய் இருந்தாலும்சிறந்த ஊர்என்று கருதுகிறேன். என் நாடு எந்த வகையிலே குறைவாய் இருந்தாலும் எனக்கு அதுவே பொன் நாடு ஆகும். நாட்டினிடம் நான் கொண்ட அன்புக்கு காரணம் உண்டா இல்லையா ?

என் தாயிடம் நான் அன்பு கொள்கிறேன். தந்தையிடமும் அன்பு கொள்கிறேன். தந்தையும் தாயும் எனக்கு இளமையில் செய்த நன்மைகளை நினைத்து அன்பு காட்டுகிறேன். என் நாடு என் தாயினும் இனியது. தாய்க்கு முதுமை வரும். தாய் என்னைப் பிரியலாம். தாய் என்னைக் கோபித்து வைதிருக்கலாம். என் நாடு என்ற தாய் ஒரு நாளும் என்னைவிட்டு பிரியமுடியாது. எனக்கு வேண்டிய நன்மைகளைக் காலத்துக்கு ஏற்றபடி செய்வதும் உண்டு. என் தாயை நான் முதுமையிலே போற்ற வேண்டும். தேசத்தாய் என்னை இளமையிலும் முதுமையிலும் போற்றி எப்பொழுதும் என்னைக் காத்து வருகிறாள்.

தேசத்தாய்க்கு எத்தனை மக்கள் உண்டு. என் உடன் பிறந்த இரண்டு பேரை நான் அண்ணன் தம்பி என்று நினைக்கிறேன்.

அதுபோலதேசத்தாயின் மக்கள் எல்லாரும் என் உடன் பிறந்தவர், உற்றவர், உறவினர், சுற்றத்தார் எல்லாம் ஆவார்கள். என் தேசத்தில் பிறந்த மக்களில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணம் உள்ளவன், இல்லாதவன் என்ற வேற்றுமைகளை நான் கனவிலும் நினைக்க மாட்டேன். என் தம்பி வேறு நான் வேறு என்று நினைத்தால் என் தாய் பொறுப்பாளா?

என் தம்பி தமையன் தங்கை தாய் தந்தையர் குடிக்கும் கூழையே நானும் குடிப்பேன் சர்க்கரைப் பொங்கல் எனக்கு உண்டு என்றால் அவர்களுக்கும் உண்டு. அவர்கள் கந்தையைக் கட்ட நான் பட்டு உடுத்த மாட்டேன். அது போலவே என் நாட்டு மக்கள் எவரும் சோற்றுக்கு இல்லாமல், துணிக்கு இல்லாமல் வருத்தப் படுவதைப்பார்த்து அதைப் போக்க வழி தேடாமல் இருக்க மாட்டேன்.

அயல் வீட்டிலே முட்டைக் கோசு முளைத்திருக்கலாம். எங்கள் வீட்டிலே அறைக்கீரை தான் இருக்கும். அயல் ஊரிலே சிறுமலைப் பழம் கிடைக்கலாம். எங்கள் ஊரில் பூவன் பழம்தான் கிடைக்கலாம். எனக்கு அறைக் கீரை பிடிக்கும். பூவன்பழமுமே அமுதமாய் இருக்கும். வெகுபாடு பட்டு அயல் நாடுகளிலிருந்து கப்பலில் ஏறி எங்கள் நாட்டிலே விலையாக வருகிற உய

ர்ந்த பொருள்களைக்காட்டிலும் எங்கள் நாட்டிலே எங்கள் ஊரிலே எங்கள் இனத்து மக்கள் குடிசைகளில் செய்த பொருள்களையே நான் விருப்பத்தோடு வாங்குவேன். மிகவும் மெல்லிய துணி சீமையிலிருந்து வந்தால் எனக்கு வேண்டாம். எங்கள் ஊரில் நெய்த முரட்டுத்துணியானாலும் அதுவே போதும்.

அயலாரிடம் நன்மை இருந்தால் நான் கற்றுக்கொள்ளக் கூசுவேன் என்பதில்லை. அற்பப் பொருளையும் வீணாக்காமல் பயன் படுத்தும் அறிவை நான் அயலாரிடம் இருந்தாலும் கற்றுக் கொள்வேன். ஒற்றுமையோடு நாட்டு நலத்திற்காக உழைக்க வேண்டும் என்ற உணர்ச்சியை, நான் அயல் நாட்டில் இருந்தாலும் கற்றுக் கொள்வேன். கப்பல், விமானம், புகைவண்டி, ரேடியோ முதலியன செய்ய வேண்டிய திறமையை எந்த எந்த நாட்டுக்குப் போய்க் கற்க வேண்டும் என்றாலும் கற்றுக் கொள்வேன். எல்லாப் பொருளும் நம் நாட்டிலே உண்டாக்க வழி செய்வதே என் நோக்கமாகும்.

இந்த எண்ணங்கள் எனக்கு வந்தது எப்படி? இன்று சுதந்திரம் பெற்றிருக்கும் நம் நாட்டின் தொண்டர்களைப் பார்த்து அறிந்து கொண்டேன். நாட்டுத் தொண்டர் வாழ்விலே எத்தனை நன்மை உண்டு! சுதந்திரம் பெற்று விட்டோம்; இனி நாம் தூங்கலாம் என்று நினைக்க முடியுமா? இனி

மேல்தான் நாம் விழிப்பாய் இருக்க வேண்டும். எல்லாச் செல்வமும் நிறைந்த நம் தேசத்தைப் பார்த்து எத்தனை நாடுகள் பொருமைப்படும்? நாம் நம்முடைய தேசத்தை உலகத்தில் ஒப்பு உயர்வு அற்றதாகச் செய்ய மனவுறுதியோடு நம் காலம் எல்லாம் உழைக்க வேண்டும். தேச பக்தர் இனத்திலே சேரவிரும்பியதால் நான் இந்த குணங்கள் உள்ளவனாய் இருக்கிறேன். தேசபக்தன் என்ற பெயர் எனக்கும் வர வேண்டும்.

| | | |
|---|---|---|
| உறவினர் | கருதுகிறேன் | உடன்பிறந்த |
| உயர்ந்தவள் | ரேடியோ | சொந்தம் |
| பொன்னுடு | சுற்றத்தார் | தாழ்ந்தவன் |
| தொண்டர் | இனிது | உற்றவர் |
| முட்டைக்கோசு | முதுமை | அறைக்கீரை |

கேள்விகள்

1. மனிதருக்குப் பொதுவாக உள்ள எண்ணம் என்ன?

2. கல்லோ மண்ணோ என்று நினைக்கத்தக்கவர் யார்?

3. நமக்கு இயல்பான குணம் என்ன?

4. மிருகங்களுக்கு உள்ள உணர்ச்சி என்ன?

5. தேசபக்தன் தன் நாட்டைப்பற்றி என்ன நினைப்பான்?

6. தாய் நாடு தாயினும் இனியது என்பது எதனுல்?

7. தேசமக்கள் எப்படி வாழவேண்டும்?

8. உள்நாட்டுப் பொருளில் ஏன் விருப்பம் வரவேண்டும்?

9. அயலாரிடம் கற்கும் நன்மைகள் சில கூறுக.

10. சுதந்திரம் வந்து விட்டதே; இனி நாம் தூங்கலாமா?

பயிற்சி.

I. அயல் வீட்டில் உள்ள முட்டை கோசைவிட, என் விட்டில் உள்ள அறைக்கீரை பெரிது.

கோடிட்ட இடத்தில் ஏற்றசொல் அமை.

1. அயல்ஊரில் உள்ள பட்டுத்துணியைவிட என் ஊரில் உள்ள———பெரிது.

2. அயல் நாட்டில் உள்ள புட்டி மருந்தை விட எங்கள் நாட்டில் உள்ள ——— நல்லது.

3. சீமையிலிருந்து வரும் புட்டிப்பாலைவிட உள்ளூரிலே கிடைக்கும்——— உயர்ந்தது.

I. நன்மையை நான் கற்றுக்கொள்ளமாட்டேன் என்பதில்லை. நன்மையைக் கற்றுக் கொள்வேன்.

மேலே காட்டியபடி மாற்றுக

1. மெய்யைச் சொல்லமாட்டேன் என்பதில்லை.

2. பொறுமையைப் பழகமாட்டேன் என்பதில்லை.

3. தேச பக்தியில் ஊறமாட்டேன் என்பதில்லை.

III பூனை தன் குட்டியை நான் தொட்டால் சும்மா இருக்குமா?

பூனை தன்குட்டியை நான் தொட்டால் சும்மா இராது.

மேலே காட்டியபடி மாற்றி எழுதுக

1. சோம்பேறிக்கு வெற்றி வருமா?

2. வயலைப் பார்க்காதவனுக்கு வயல் மிஞ்சுமா?

3, நெய்யத் தெறியாதவனுக்கு நெசவின் அழகு புரியுமா?

4. பாடிப் பழகாதவனுக்குப் பாட்டு வருமா?

5. வீரனுக்கு அச்சம் உண்டா?

146 842

6.3-97

1275/114